Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2.** தமிழில் முதல் இலக்கண நூல்...............
அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) பதிற்றுப்பத்து ஈ) தொல்காப்பியம்

**3.** நூலைப் புரிந்து கொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் .......... உதவுகிறது.
அ) முடிவுரை ஆ) சிறப்புப்பாயிரம் இ) பாயிரம் ஈ) பொதுப்பாயிரம்

**4.** நன்னூல் ................. வகையைச் சார்ந்தது.
அ) முதல்நூல் ஆ) வழி நூல் இ) சார்பு நூல் ஈ) மொழிபெயர்ப்பு நூல்

**5.** நன்னூல் இயற்றப்பட்ட காலம் .................
அ) கி.பி. 12 ஆ) கி.பி. 13 இ) கி.பி. 17 ஈ) கி.பி. 18

**6.** நன்னூலை இயற்றிய புலவர் .......................
அ) பவணந்தி முனிவர் ஆ) தண்டி இ) தொல்காப்பியர் ஈ) அமிர்தசாகரர்

**7.** நமது பாடப்பகுதியில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை ..................
அ) ஏழு ஆ) ஒன்பது இ) எட்டு ஈ) ஆறு

**8.** வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக்குறிப்பு............
அ) வினைத்தொகை ஆ) தொழிற்பெயர் இ) பண்புத்தொகை ஈ) வியங்கோள் வினைமுற்று

**9.** நன்னூல் முதல் பதிப்பு ................ ஆண்டில் நடைபெற்றது.
அ) 1884 ஆ) 1934 இ) 1834 ஈ) 1734

**10.** யார் கேட்டுக் கொண்டதால் பவணந்தி நன்னூலை இயற்றினார்?
அ) குலோத்துங்கன் ஆ) நந்திவர்மன் இ) சீயகங்கன் ஈ) சேரன் செங்குட்டுவன்

**11.** நன்னூல் ............, ................ அதிகாரங்களைக் கொண்டது.
அ) எழுத்து, சொல் ஆ) பொருள், யாப்பு இ) எழுத்து, பொருள் ஈ) யாப்பு, அணி

**12.** பொருத்துக.
அ) மாநகர் - 1. முற்றும்மை
ஆ) கோடல் - 2. வினையாலணையும் பெயர்
இ) கேட்போர் - 3. உரிச்சொற்றொடர்
ஈ) ஐந்தும் - 4. தொழிற்பெயர்
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 2, 1, 3

**13.** முகவுரை பற்றிய சரியான தொடரைத் தேர்க.
அ) பல்வகைப் பொருளையும் தொகுத்துச் சொல்வது
ஆ) நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது.
இ) நூலின் புறத்திலே சொல்வது
ஈ) நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது

**14.** பவணந்தி முனிவர் வாழ்ந்த காலம் ................ ஆம் நூற்றாண்டு.
அ) பொ.ஆ. 16 ஆ) பொ.ஆ. 14 இ) பொ.ஆ. 18 ஈ) பொ.ஆ. 13

**15.** பொருத்துக.
அ) பால் - 1. பண்பு
ஆ) இயல்பு - 2. மாளிகை
இ) அமை - 3. வகை
ஈ) மாடம் - 4. மூங்கில்
அ) 3, 1, 2 4 ஆ) 2, 3, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 1, 4, 2

**16.** "பாயிரம் இல்லது பனுவல் அன்றே" - இந்நூற்பா இடம்பெற்ற நூல்.................
அ) வீரசோழியம் ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல் ஈ) அகப்பொருள் இலக்கணம்

**17.** "உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே-" - விதிகளுக்கான சான்று தருக.
அ) பொதுச்சிறப்பு ஆ) நூன்முகம் இ) அணிந்துரை ஈ) புறவுரை





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



18. **பொதுப்பாயிரம் குறிப்பிடும் செய்திகள்................**

அ) ஐந்து ஆ) எட்டு இ) ஆறு ஈ) ஏழு

19. **சிறப்புப் பாயிரம் வெளிப்படுத்தும் செய்திகள்................**

அ) எட்டு ஆ) ஐந்து இ) ஏழு ஈ) ஆறு

20. **மாடங்களுக்கு ஓவியங்களும் பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும் அழகு தருவதைப் போல நூலுக்கு முன்னர் அழகு தருவது**

அ) நூன்முகம் ஆ) அணிந்துரை இ) புறவுரை ஈ) தந்துரை

21. **நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது ................**

அ) அணிந்துரை ஆ) புறவுரை இ) பதிகம் ஈ) முகவுரை

22. **கற்கும் முறை பற்றி கூறுவது..............**

அ) சிறப்புப்பாயிரம் ஆ) பாயிரம் இ) பொதுப்பாயிரம் ஈ) எதுவுமில்லை

23. **நன்னூலுக்கு உரை செய்தவர் ....................**

அ) சேனாவரையார் ஆ) இளம்பூரணர் இ) விசாகப்பெருமாள் ஈ) நக்கீரர்

24. **'நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன்' பற்றிக் கூறும் பகுதி எது?**

அ) பொதுப்பாயிரம் ஆ) அணிந்துரை இ) புறவுரை ஈ) சிறப்புப்பாயிரம்

25. **கூற்று 1 – பாயிரம் பொது, சிறப்பு என இருவகைப்படும்.**
**கூற்று 2 – ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது பதிகம் ஆகும்.**

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1,2 தவறு இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

26. **பவணந்தியாரின் உருவச் சிற்பம் உள்ள மாவட்டம் ................**

அ) கோவை ஆ) சேலம் இ) ஈரோடு ஈ) நாமக்கல்

விடைகள் :

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | இ | ஏழு | 2. | ஈ) | தொல்காப்பியம் | 3. | இ | பாயிரம் |
| 4. | ஆ | வழி நூல் | 5. | ஆ | கி.பி. 13 | 6. | அ) | பவணந்தி முனிவர் |
| 7. | அ) | ஏழு | 8. | ஆ | தொழிற்பெயர் | 9. | இ | 1834 |
| 10. | இ | சீயகங்கன் | 11. | அ) | எழுத்து, சொல் | 12. | ஆ | 3, 4, 2, 1 |
| 13. | ஆ | நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது | | | | 14. | ஈ) | பொ.ஆ. 13 |
| 15. | ஈ) | 3, 1, 4, 2 | 16. | இ | நன்னூல் | 17. | இ | அணிந்துரை |
| 18. | அ) | ஐந்து | 19. | அ) | எட்டு | 20. | ஆ | அணிந்துரை |
| 21. | ஆ | புறவுரை | 22. | இ | பொதுப்பாயிரம் | 23. | இ | விசாகப்பெருமாள் |
| 24. | ஈ) | சிறப்புப்பாயிரம் | 25. | அ) | கூற்று 1, 2 சரி | 26. | இ | ஈரோடு |

## குறுவினா

1. **பாயிரம் என்பது யாது?**
நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.

2. **பாயிரத்தின் வேறு பெயர்கள் யாவை?**
முகவுரை, புறவுரை, பதிகம், தந்துரை, நூன்முகம், புனைந்துரை ஆகிய ஏழும் பாயிரத்தின் வேறு பெயர்களாகும்.

3. **பொதுப் பாயிரத்தின் இலக்கணம் யாது?**
நூலின் இலக்கணம், நூலினை இயற்றிய ஆசிரியரின் இலக்கணம், பாடம் நடத்தும் முறையின் இலக்கணம், பாடத்தைக் கேட்கும் மாணவனின் இலக்கணம், பாடம் கேட்கும் முறையின் இலக்கணம் ஆகியவற்றை உள்ளடக்கியது பொதுப் பாயிரத்தின் இலக்கணமாகும்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

1. **நன்னூலின் ஆசிரியர் ................** செப்.2020

அ) தொல்காப்பியர் ஆ) அகத்தியர்
இ) பவணந்தி முனிவர் ஈ) திருவள்ளுவர்

**விடை: இ) பவணந்தி முனிவர்**

☆☆☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1 என்னுயிர் என்பேன் - மொழி

# ஆறாம் திணை

- அ. முத்துலிங்கம் விரிவானம்

## கரு

✳ காலந்தோறும் நிலையான வாழ்விடங்களைத் தேடி புலம் பெயர்ந்தபடியே இருந்த நாடோடி இனம், நிலத்தை உடைமையாகக் கொண்ட சமூகமாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின.

✳ தாய்மண்ணிலிருந்து மனித உயிர்களை வெளியேற்றியும் கொன்று புதைக்கும் போக்கும் காலந்தோறும் நடந்துவரும் பெரிய அவலமாகும். அவ்வாறு தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாத வலியோடும், வடுவோடும் பதிவு செய்கிறது இந்த ஆறாம் திணை.

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | அ. முத்துலிங்கம் |
| பிறப்பு | : | 19.01.1937 (84) |
| ஊர் | : | கொக்குவில் கிராமம், யாழ்ப்பாணம், இலங்கை. |
| இருப்பிடம் | : | பணி தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். |
| சிறுகதைத் தொகுப்புகள் | : | அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகட சக்கரம் புதினம் - 2, சிறுகதைத் தொகுப்பு - 15, கட்டுரைத் தொகுப்பு - 9, விருது - 12. |
| பரிசுகள் | : | 1996ஆம் ஆண்டு, வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999-இல் இலங்கை அரசின் சாகித்திய அகாதெமி பரிசையும் பெற்றவர். |

www.Padasalai.Net www.surabooks.com

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

நெடுவினா | கேள்வி எண்: 3 | புத்தக பக்கம் எண்: 22

**3. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?** காலாண்டுத் தேர்வு 2018

**முன்னுரை :**

அ. முத்துலிங்கம் இலங்கை தமிழர். யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் எனும் கிராமத்தில் பிறந்தவர். 1996-இல் வம்சவிருத்தி சிறுகதைத் தொகுப்புக்கு தமிழக அரசின் பரிசினைப் பெற்றவர். 1996ல் வடக்கு வீதி என்ற சிறுகதைத் தொகுப்புக்கு சாகித்திய விருதையும் பெற்றவர். இவர் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார். புலம் பெயர்ந்த மக்களின் அவலங்களை இப்பகுதிச் சுட்டுகிறது.

**சங்க இலக்கியம் கூறிய புலம்பெயர் நிகழ்வு:**

(i) தமிழர்கள் வேலைவாய்ப்பு, வறுமை போன்ற காரணங்களினால் இடம் விட்டு இடம் செல்கின்றனர். இவ்வாறு புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம் பெயர்ந்தபடியே இருக்கிறான்.

(ii) சங்க இலக்கியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்கள் பற்றிப் பேசும் பல பாடல்கள் தலைவன், தலைவி பிரிந்து போவதைச் சொல்லும் பொருள் தேடப் போவதால் புலம்பெயர நேரிடுகிறது.

(iii) நற்றிணை 153ஆவது பாடலில் 'தனிமகனார்' சினம் கொண்ட அரசனின் கொடுமைத் தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரைவிட்டு ஓடியவர்களின் கதையை,

'வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி,
வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்' என்கிறார்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.** ஜூன் 2019, காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020, செப்.2021, தி.தேர்வு & மே 2022

அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

இ) கடல் + அலை – உயிர் + மெய் ஈ) மண் + வளம் – மெய் + மெய்

விடை: (இ) கடல் + அலை – உயிர் + மெய்

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர். (3)

விடை: அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர். (10)


விடை: கல்யாண சுந்தரனார்

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர். (6)

விடை: பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர். (2)

விடை: ஜீவா.




**3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** ஜூன் 2019, ஆகஸ்டு 2022

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

விடை: காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது. அ. தேர்வு 2019, செப்.2021, தி.தேர்வு, மே, ஆகஸ்டு 2022

விடை: முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும். செப்.2021, ஆகஸ்டு 2022

விடை: காலத்திற்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

விடை: ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

உ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும். மே, ஆகஸ்டு 2022

விடை: தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.

**4. வினாக்கள்**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?** மு.ப.இடைத்தேர்வு 2018, அ. தேர்வு 2019

(i) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் – 22.

(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.

(iii) மெய்களில் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாக வரும்.

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.** மு.ப.இடைத்தேர்வு 2018

(i) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் – 24.

(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.

(iii) மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.

(iv) குற்றியலுகரம் ஒன்று.

எ.கா. : பல, பலா, கரி, தீ, கொடு, பூ, சே, நகை, நொ, கோ, கௌ, உரிஞ், கண், வெறிந், அறம், பொன், தாய், பார், கால், தெவ், வாழ், கேள்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**அனுப்புநர்:**

இரா. பார்த்த சாரதி,
தலைவர், மாணவர் மன்றம்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
வேளச்சேரி,
சென்னை - 42.

**பெறுநர்:**

உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
தினத்தந்தி நாளிதழ்,
எழும்பூர், சென்னை - 7

**பொருள் :** நாளிதழில் செய்தி இடம் பெறவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

எங்கள் அரசு மேனிலைப் பள்ளியில், திங்கள் கூடுகை நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில் "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" எனும் தலைப்பில் பேச வருகை தரும் அன்பு உள்ளங்களை தங்கள் தினத்தந்தி நாளிதழ் வாயிலாக வரவேற்பு நடத்தவும் அந்த நிகழ்ச்சிகளை நாளிதழ் வாயிலாகத் தெரிவிக்கவும் விரும்புகிறேன். அருள் கூர்ந்து எங்கள் பள்ளி சார்பில் நடத்தும் நிகழ்ச்சி நிரலினைத் தங்கள் நாளிதழில் செய்தியாக இடம்பெற ஆவன செய்யுமாறு எங்கள் பள்ளி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

**இடம் :** சென்னை, இப்படிக்கு,
**நாள் :** 15.06.2021. இரா. பார்த்த சாரதி.



**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்று பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' - தொ. பரமசிவன்)

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**
தமிழ் என்ற சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள்: இனிமை, பண்பாடு, அகப்பொருள், அழகு, கலைப்புலமை, மென்மை போன்றனவாகும்.

2. **பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**
(i) அதூஉம் - இசைநிறையளபெடை / செய்யுளிசை அளபெடை
(ii) தழீஇய - சொல்லிசையளபெடை.

3. **தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**
தமிழ் என்றவுடன் நம் மனதில் தோன்றுவது. தமிழின் இனிமை, எளிமை, புதுமை. தமிழ்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்கள்.

4. **திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**
திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் 'தமிழ்மாலை'.

5. **பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**
தமிழின் பெருமை.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



ஆ) **பேசு** – வேர்ச்சொல்

கண்ணன் நன்றாகப் **பேசினான்.** **(வினைமுற்று)**

மேடையில் **பேசிய** கண்ணனை அனைவரும் பாராட்டினர். **(பெயரெச்சம்)**

குழந்தை நினைத்தவற்றையெல்லாம் **பேசி** முடித்தது. **(வினையெச்சம்)**

“வானொலியில் **பேசியவர்** யார்?” என்று அண்ணன் தம்பியிடம் கேட்டான். **(வினையாலணையும் பெயர்)**

இ) **தா** – வேர்ச்சொல்

வேல்விழி கயல்விழிக்குப் புத்தகம் **தந்தாள்.** **(வினைமுற்று)**

வேல்விழி **தந்த** புத்தகம் கயல்விழிக்குப் பிடித்திருந்தது **(பெயரெச்சம்)**

தலைமையாசிரியர் சான்றிதழ்களைத் **தந்து** முடித்தார். **(வினையெச்சம்)**

தானமாகப் பொருட்களைத் **தந்தவர்** மகிழ்ந்தார். **(வினையாலணையும் பெயர்)**

ஈ) **ஓடு** – வேர்ச்சொல்

மாணவர்கள் வேகமாக **ஓடினர்.** **(வினைமுற்று)**

வேகமாக **ஓடிய** மாணவன் வெற்றி பெற்றான். **(பெயரெச்சம்)**

குமரன் வேகமாக **ஓடி** விழுந்தான். **(வினையெச்சம்)**

மெதுவாக **ஓடியவர்** தோற்றார். **(வினையாலணையும் பெயர்)**

அரையாண்டுத் தேர்வு 2018
காலாண்டுத் தேர்வு 2019

உ) **பாடு** – வேர்ச்சொல்

கீதா பாட்டுப் **பாடினாள்.** **(வினைமுற்று)**

பாட்டுப் **பாடிய** கீதா நடனமும் ஆடினாள். **(பெயரெச்சம்)**

கீதா பாட்டுப் **பாடி** முடித்தாள். **(வினையெச்சம்)**

வகுப்பில் **பாடியவள்** அனைவராலும் பாராட்டப்பட்டாள். **(வினையாலணையும் பெயர்)**



## செய்து கற்போம்

1. **தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் செய்திகள், கவிதைகள், படங்களைச் சேகரித்து எட்டுப் பக்க அளவில் தொகுப்பேடு உருவாக்குக.**

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் செய்திகள்:**

(i) உலக மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் எனத் தமிழ் வரலாறு எனும் நூலில் மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இயல்பாகத் தோன்றிய இயன்மொழியான நம் தமிழ் மொழிக்குப் பதினாறு பண்புகள் உள்ளன.

(ii) நம் தமிழ்மொழி பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் பாவாணர். தொன்மை, முன்மை, எளிமை, ஒன்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை – இவை பாவாணர் கூறிய செவ்வியல் பண்புகள் ஆகும்.

(iii) உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழியில் மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர்.

(iv) பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் எனும் நூல்வழி அறியலாம். அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ். அக்கால மக்கள் வீரவாழ்க்கையும் கொடைச் சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக திகழ்வது பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகும்.

(v) தமிழில் அறநூல்கள் ஏராளமாக உள்ளன. தேடினாலும் திருக்குறள் போல வேறு மொழிகளில் அறநூலுண்டோ? மனதை நெகிழ்வித்து உருக்குவதற்குத் தேவார திருவாசகம் தமிழில் வைரமாக ஒளிர்கின்றன. வேற்றுமொழிகளில் இல்லாத அளவிற்குத் தொல்காப்பியம் தொடங்கி இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கின்றன. ‘இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்’– என்று ‘பிங்கலந்தை’ என்னும் நிகண்டு நூல் கூறுகிறது. ‘தமிழ்’ என்னும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும். தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும்.

(vi) தமிழில் ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளையும் சிறப்பெழுத்துகள் என நற்றமிழ் இலக்கணம் எனும் நூலில் டாக்டர் சொ. பரமசிவம் குறிப்பிடுகிறார். ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளுள் ‘ழ’ வைத் தவிர்த்து பிற நான்கும் பிற திராவிட மொழிகளிலும் உலக மொழிகளிலும் காணப்படுகின்றன.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(vii) 'ழ' கரம் தமிழைத் தவிர்த்து திராவிட மொழியான மலையாள மொழியிலும் உலக மொழிகளுள் பிரெஞ்சு மொழியிலும் மட்டுமே உள்ளது. தமிழ்மொழி இன்றளவும் பேச்சளவிலும் ஏட்டளவிலும் உள்ள கன்னித் தமிழாக அழியாமல் இருக்கின்றது. தமிழின் இனிமையைப் பாராட்டாத இலக்கியங்களே இல்லை.

கம்பராமாயணம், 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" – பாரதியார்

(viii) "தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்" – பாரதிதாசன் தமிழின் சிறப்பை உணர்ந்த மேலை நாட்டறிஞர் டாக்டர் ஜி.யு.போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்கச் செய்தார்.

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் கவிதை :**

பைந்தமிழ் பாவலன் பாடும் பைந்தமிழே!
என்றும் இளமை மாறா செந்தமிழே!
வடிதமிழ் மதுரம் ஒழுகிய தீந்தமிழே!
தெள்ளித் தெளிக்கும் தமிழ்க் கடலே!
தெளி தமிழ் தென்னந் தமிழே!
முது சொல் புலவர் தெளித்த பசுந்தமிழே!

தெய்வத்தமிழ் மதுரம் ஒழுகும் கொழி தமிழே!
இலக்கண இலக்கியம் தந்த தமிழே!
இயல் இசை நாடகம் எனும் முத்தமிழே!
நீ வாழி! நின் புகழ் பாட வரம் தா
செந்தமிழே! மதுர கவி தீந்தமிழே!

## சொற்சுவை

**தகப்பன் :** தந்தை என்ற பொருளில் வருவது இச்சொல். தம் அப்பன் = தமப்பன் என்ற வடிவத்தில் தான் முதலில் இருந்தது. இவ்வடிவமே திரிந்து தகப்பன் என்றாயிற்று.

## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனதில் நிகழும் மாற்றங்கள் | நான் செய்ய வேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன். |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. அழகியல் – Aesthetics (தி.தேர்வு 2022) | 4. புலம்பெயர்தல் – Migration |
| 2. புத்தக மதிப்புரை – Book Review (மே 2022) | 5. கலை விமர்சகர் – Art Critic |
| 3. இதழாளர் – Journalist | 6. மெய்யியலாளர் – Philosopher |

## அறிவை விரிவு செய்

1. நாடற்றவன் – அ.முத்துலிங்கம்
2. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? – அ.கி. பரந்தாமனார்
3. உயிர்த்தெழும் காலத்துக்காக – சு.வில்வரத்தினம்

## அரசு தேர்வு வினா - விடைகள்

1. **தமிழ் + அன்னை – சொற்புணர்ச்சியில் எழுத்துகள் சந்திக்கும் முறை ..............** (மு.ப.இடைத்தேர்வு 2018)

அ) உயிர் + உயிர் ஆ) மெய் + மெய் இ) மெய் + உயிர் ஈ) உயிர் + மெய்

**விடை:** இ) மெய் + உயிர்

☆ ☆ ☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# இயற்கை வேளாண்மை

உரைநடை உலகம்

## கரு

✳ மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை.

✳ அதனால் தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.

✳ இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் தீமை விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இந்தப்பாடம்.



## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

### பலவுள் தெரிக

கேள்வி எண்: 2, 4 | புத்தக பக்கம் எண்: 52

**2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன -** (காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2019)

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை: ஈ) இவை மூன்றும்**

**4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை** (காலாண்டுத் தேர்வு 2019)

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ - தவறு, ஆ- சரி

**விடை: i) அ - மட்டும் சரி**

### குறுவினா

கேள்வி எண்: 1 | புத்தக பக்கம் எண்: 52

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.** (அரையாண்டுத் தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2019)

(i) தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம் ஆகும்.

(ii) இது ஏழைகளின் கற்பக விருட்சம் ஆகும்.

(iii) இது ஒரு சிறந்த காற்றுத் தடுப்பான் ஆகும். ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.

(iv) பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர் முதலியன கிடைக்கின்றன. அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

### சிறுவினா

கேள்வி எண்: 1 | புத்தக பக்கம் எண்: 52

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.**

**வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:** (காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020)

(i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை 'இயற்கைப் பூச்சிக்கொல்லி' என்கிறோம்.

(ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.

(iii) வேதிக்கலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும். இதனால் வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# ஏதிலிக்குருவிகள்

- அழகிய பெரியவன் கவிதைப்பேழை

## கரு

* உயிர்களின் இருப்பை (வாழ்வை) இயற்கைச் சூழலே முடிவு செய்கிறது.
* இயற்கைக்கும் மனிதருக்கும் தொப்புள்கொடி மழைத்துளி.
* மண்ணில் முதல் துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தை இக்கவிதை காட்சியாக வெளிப்படுத்துகிறது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | அழகிய பெரியவன் |
| இயற்பெயர் | : | அரவிந்தன் |
| ஊர் | : | வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு |
| பணி | : | அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். |
| சிறப்பு | : | தகப்பன் கொடி புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். |
| சிறப்பு படைப்புகள் | : | புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை.<br>சிறுகதைத் தொகுப்புகள் : குறடு, நெரிக்கட்டு<br>கவிதைத் தொகுப்புகள் : உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு<br>கட்டுரைத் தொகுப்புகள் : மீள்கோணம், பெருகும் வேட்கை |
| நூல் | : | சிறுகதை - 10, கவிதை - 4, புதினம் - 4, கட்டுரை - 8 |
| விருது | : | தமிழக சிற்பி இலக்கிய விருது, பெரியார் விருது. |

www.Padasalai.Net

## பாடல்

குருவிகளையும்
கூடுகளையும்
பார்க்கக் கூடவில்லை
முன்பென்றால் ஊரில்
அடைமழைக்காலம்
ஆற்றில் நீர் புரளும்
கரையெல்லாம் நெடுமரங்கள்
கரைகின்ற பறவைக் குரல்கள்
போகும் வழியெல்லாம்
தூக்கணாங்குருவிக் கூடுகள்
காற்றிலாடும் புல் வீடுகள்

மூங்கில் கிளையமர்ந்து
சுழித்தோடும் நீருடன்
பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்
மண்ணின் மார்பு
சுரந்த காலமது
வெட்டுண்டன மரங்கள்
வான் பொய்த்தது
மறுகியது மண்
ஏதிலியாய்க் குருவிகள்
எங்கோ போயின.



– அழகிய பெரியவன்

## பொருளுரை

உயிர்களின் இருப்பை இயற்கைச் சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி மழைத்துளி. மண்ணில் முதல் துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

குருவிகளையும் கூடுகளையும் பார்க்கக் கூட முடியவில்லை. இதற்குக் காரணம் மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்கள் வெட்டப்படுவதால் மழைப் பொழிவு முற்றிலும் பொய்த்து விடுகிறது. இதனால் மண் இறுக்கம் காட்டுகிறது. இந்நிலையில் ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின. சிதறும் தானியங்கள்தான் இந்தச் சிட்டுக் குருவிகளின் பிரதான உணவு. இன்று நவீன மயமானதன் விளைவு, எல்லா தானியங்களும் பாலிதீன் பைகளில் வந்துவிட்டன. சிட்டுக்குருவிகளின் குஞ்சுகள் உணவுக்காக அவைகள் தோட்டத்துச் சிறு பூச்சிகள், புழுக்களையே முழுவதும் நம்பி உள்ளன. ஆனால் இன்று நமது நாட்டுத் தாவரங்களும், புற்களும் இல்லாததால் அதை நம்பி வாழும் புழுக்கள், பூச்சிகள் அரிதாகிவிட்டன.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

**பலவுள் தெரிக** கேள்வி எண்: 3 புத்தக பக்கம் எண்: 52

**3. “வான் பொய்த்தது” - என்று சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்........** திதேர்வு 2022

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

விடை: ஆ) மழை பெய்யவில்லை

**குறுவினா** கேள்வி எண்: 2 புத்தக பக்கம் எண்: 52

**2. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?** கா.தேர்வு 2019, செப்.2021, மே 2022

(i) மரங்கள் வெட்டப்பட்டதால் மழைவளம் குறைந்தது. மழை பெய்யாததால் மண்ணின் வளம் குறைந்தது.
(ii) குருவிகள் வாழ முடியாதபடி இயற்கையில் சூழ்நிலை மாற்றம் ஏற்பட்டது. அதனால் குருவிகள் எங்கோ இடம்பெயர்ந்து சென்றுவிட்டன.

**சிறுவினா** கேள்வி எண்: 2 புத்தக பக்கம் எண்: 52

**2. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?** கா.தேர்வு 2019, தி.தேர்வு, ஆகஸ்டு 2022

ஒப்பீடு: காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு தூக்கணாங்குருவியின் கூடாகும்.
ஏன் : தூக்கணாங்குருவிகள் புற்களைக் கொண்டு தனக்காகக் கூடு கட்டிக் கொள்ளும். அக்கூடுகள் காற்றடிக்கும்போது அசைந்தாடும் அழகை ‘காற்றில் ஆடும் புல்வீடுகள்’ எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

## கற்பவை கற்றபின்

**1. நகரங்களின் பெருக்கமும் பறவையினங்களின் அழிவும் - காரணங்களுடன் வகுப்பறையில் விவாதிக்க.**

ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாகப் பறக்கும் காகங்களை இப்போது காணவில்லை. அணி அணியாக அலைந்துத் திரியும் சிட்டுக் குருவிகளைக் காணவில்லை. இனங்களுடன் சேர்ந்தே வாழும் மைனாக்களைக் காணவில்லை. வண்ண வண்ண நிறங்களில் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளைக் காணவில்லை. கடவுளாகக் கருதிக் கன்னத்தில் போட்டு வழிபடும் கிருஷ்ணமூர்த்திக் கருடனைக் காணவில்லை. மலர்கள் தோறும் தேனெடுக்கும் தேனீக்களைக் காணவில்லை. மழை கண்ட மகிழ்ச்சியில் ஆடும் அழகிய மயிலும் இனிய இசைக்குப் பெயர் பெற்ற குயிலையும் காணவில்லை ஏன்?

ரங்கராஜன் : உலகம் அறிவியல் வளர்ச்சி அடைய அடைய கிராமங்கள்கூட சில ஆண்டுகளில் நகரங்களாக மாறுகிறது. மக்களின் தேவைப்பாடு அதிகரிக்க அதிகரிக்க மரம், செடிகள், ஆறுகள், ஏரிகள் அழிக்கப்பட்டு இன்று கூரைகள் இல்லாத கான்கிரீட் கட்டிடங்களாக உருவாகியுள்ளதால் பறவைகள் தங்குமிடம் இல்லாமல் தவிக்கின்றன.

விஷ்ணு : ஆமாம், உண்மைதான். சுதந்திரமாகக் காற்று மண்டலத்தில் பறக்க முடியாமல் செல்போன் கோபுரக் கதிரியக்க அலைகள் ஏற்படுத்தும் பாதிப்பும் அவற்றுக்கு உள்ளது. செல்போன் கோபுர மின்காந்த கதிரியக்க அலைகளின் தாக்கத்தால் பறவையினங்கள் அழிகிறது என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஓவியா : நீங்கள் கூறுவதும் உண்மைதான், செல்லிடப்பேசி கோபுரங்களில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு குருவியின் கருவைச் சிதைப்பதாகவும், முட்டையிட்டாலும், கரு வளர்ச்சி அடையாமல் வீணாவதாகவும் கூறப்படுகிறது. இதனால் பறவைகள் இனப்பெருக்கம் அடையாமல் இருப்பதால் பறவை இனங்கள் அழிகிறது. எனவே நகரங்கள் பெருக்கம் அடைந்ததால் பறவை இனங்கள் வளர்ச்சியில்லாமல் அழிகிறது.

**2. உங்களது மழைக்கால அனுபவங்களைக் கவிதையாக வெளிப்படுத்துக.**

நீ
வரும்போது
மேகங்கள் கருமையாகும்
மனமோ மகிழ்ச்சியாகும்.
நீ
என் மீது பட்டதும்
உடலும் உள்ளமும் சிலிர்க்கும்
என்னுடன் சேர்ந்து மண்ணும்.

உன்னோடு நனைந்து நனைந்து
ரம்மியமாக ரசிப்பேன்.
உன்னை
என் இரு கைகளில் பிடிக்கும்போது
அளவில்லா ஆனந்தம்
எனக்கும் உனக்குந்தான்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. உயிர்களின் இருப்பை ................ முடிவு செய்கிறது.
   அ) இயற்கைச் சூழல் ஆ) ஆற்றுச் சூழல் இ) மலைச்சூழல் ஈ) காட்டுச் சூழல்

2. இயற்கைக்கும் மனிதருக்கும் உள்ள தொப்புள் கொடி ................
   அ) மலைகள் ஆ) மழைத்துளி இ) ஆறுகள் ஈ) சமவெளிகள்

3. ஏதிலிக் குருவிகள் என்ற கவிதை எதை உணர்த்துகிறது?
   அ) உணவு இல்லாத சூழ்நிலை ஆ) உறவுகள் அற்றுவிட்ட சூழ்நிலைகள்
   இ சூழலியல் மாற்றத்தின் அவல நிலை ஈ) எதுவுமில்லை

4. அழகிய பெரியவன் எழுதாத நூல் எது?
   அ) மீள்கோணம் ஆ) பெருகும் வேட்கை இ) லங்காபுரி ராஜா ஈ) நெரிக்கட்டு

5. 'காற்றிலாடும் <u>புல்வீடுகள்</u>' - இதில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு.........
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை இ) வினைத்தொகை ஈ) உருவகம்

6. ''ஏதிலியாய்க் குருவிகள்
   எங்கோ போயின''- மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
   அ) ஏதிலி - குருவிகள் ஆ) எங்கோ - போயின இ) ஏதிலி - எங்கோ ஈ) ஏதிலி - போயின

7. அழகிய பெரியவனின் இயற்பெயர்...........
   அ) அரவிந்தன் ஆ) ஆனந்தன் இ) சிவராமலிங்கம் ஈ) சுந்தரமூர்த்தி

8. அழகிய பெரியவன் ..................... மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
   அ) திருவள்ளூர் ஆ) வேலூர் இ) காஞ்சிபுரம் ஈ) தருமபுரி

9. கீழ்க்கண்டவற்றுள் அழகிய பெரியவனின் கவிதை நூல் எது?
   அ) அரூப நஞ்சு ஆ) மீள்கோணம் இ) குறடு ஈ) நெரிக்கட்டு

10. தமிழக அரசின் விருது பெற்ற அழகிய பெரியவனின் புதினம் எது?
    அ) மீள்கோணம் ஆ) தகப்பன்கொடி இ) பெருகும் வேட்கை ஈ) உனக்கும் எனக்குமான சொல்

11. தகப்பன்கொடி புதினத்திற்காக தமிழக அரசு விருது வழங்கிய ஆண்டு ..................
    அ) 2009 ஆ) 1993 இ) 2013 ஈ) 2003

12. புல்வீடுகள் என அழகிய பெரியவன் குறிப்பிடுவது.............
    அ) காக்கை கூடுகள் ஆ) கிளிக்கூடுகள்
    இ) தூக்கணாங்குருவிக் கூடுகள் ஈ) புறாக்கூடுகள்

விடைகள் :
1. அ) இயற்கைச் சூழல் 2. ஆ) மழைத்துளி
3. இ சூழலியல் மாற்றத்தின் அவல நிலை 4. இ) லங்காபுரி ராஜா
5. ஈ) உருவகம் 6. இ) ஏதிலி - எங்கோ 7. அ) அரவிந்தன்
8. ஆ) வேலூர் 9. அ) அரூப நஞ்சு 10. ஆ) தகப்பன்கொடி
11. ஈ) 2003 12. இ) தூக்கணாங்குருவிக் கூடுகள்

### குறுவினா

1. அழகிய பெரியவனின் கவிதை நூல்கள் யாவை?
   (i) உனக்கும் எனக்குமான சொல் (ii) அரூப நஞ்சு

2. 'ஏதிலிக்குருவிகள்' என்ற கவிதை எதைக் காட்சிப்படுத்துகிறது?
   சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

ஏதிர்பாரா நீதமரம்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**சிறுவினா**

1. **சூழலியல் மாற்றத்தால் நிகழும் அவலத்தை 'ஏதிலிக் குருவிகள்' கவிதை வழி விளக்குக.**

(i) குருவிகளையும் கூடுகளையும் பார்க்கக் கூடவில்லை.

(ii) முன்பெல்லாம் அடைமழைக்காலத்தில் ஆற்றில் நீர் புரண்டு ஓடும்.

(iii) கரைகளில் உள்ள நெடுமரங்களில் பறவைகள் ஒலியெழுப்பும்.

(iv) வழிநெடுகிலும் தூக்கணாக்குருவி கூடுகள் காற்றிலாடும்.

(v) கிளைகளில் சிட்டுக்கள் பாடும், மண்வளம் மிகுந்த காலம். ஆனால் மரம் வெட்டப்பட்டதால் மழைகுறைந்தது. மண்வளம் குறைந்தது. பறவைகள் அகதிகளாக எங்கோ சென்றுவிட்டன. இவையனைத்தும் சூழலியல் மாற்றங்களால் விளைந்தது ஆகும்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக**

(மு.ப.இடைத்தேர்வு 2018, தி.தேர்வு 2022, ஆகஸ்டு 2022)

1. **உலகச் சிட்டுக்குருவி நாள் ----------**

அ) மார்ச் - 20 ஆ) அக்டோபர்- 20
இ) டிசம்பர் - 20 ஈ) ஜுன் - 20

**விடை:** அ) மார்ச் - 20

☆☆☆

இயல் 2

## இயல் 2 மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# காவியம்

- பிரமிள் கவிதைப்பேழை

www.Padasalai.Net
www.surabooks.com

**கரு**

* இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர். சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானுக்கும் இடையில் காற்றின் இடைவிடாத தழுவலால் மண்ணில் விழாது தன் வாழ்வை எழுதுகிறது.
* ஒரு பறவையின் வாழ்வைப் பாடுபொருளாகக் கொண்டு பிரமிள் கவிதை படைத்திருக்கிறார்.

**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | பிரமிள் |
| இயற்பெயர் | : | சிவராமலிங்கம் |
| பிறந்த நாடு | : | இலங்கை |
| புனைப் பெயர்கள் | : | பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் |
| படைப்பு | : | புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் |
| ஈடுபாடு | : | ஓவியம், சிற்பம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கவிதை | : | பிரமிள் கவிதைகள் | சிறுகதை | : | லங்காபுரி ராஜா |
| நாடகம் | : | நக்ஷத்திரவாசி | கட்டுரை | : | வெயிலும் நிழலும் |

**பாடல்**

**சிறகிலிருந்து பிரிந்த**
**இறகு ஒன்று**
**காற்றின் தீராத பக்கங்களில்**
**ஒரு பறவையின் வாழ்வை**
**எழுதிச் செல்கிறது .**



– பிரமிள்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



5. **சிறகிலிருந்து பிரிந்த**
**இறகு ஒன்று ........... இவ்வடியில் பயின்றுவரும் தொடை நயம் ...........**

அ) சீர்மோனை ஆ) அடிமோனை இ) அடி இயைபு ஈ) அடி எதுகை

6. **பொருத்துக.**

i) வெயிலும் நிழலும் - 1. கவிதைத் தொகுப்பு
ii) நக்ஷத்திரவாசி - 2. கட்டுரைத் தொகுப்பு
iii) லங்காபுரி ராஜா - 3. நாடகம்
iv) பிரமிள் கவிதைகள் - 4. சிறுகதைத் தொகுப்பு

அ) 2, 3, 1, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

7. **பிரமிள் எந்தெந்த துறையில் ஈடுபாடு கொண்டிருந்தார்?**

அ) இதழ், தொலைக்காட்சி ஆ) கட்டுரை, நாடகம்
இ) புதினம், சிற்றிலக்கியம் ஈ) ஓவியம், சிற்பம்

8. **பிரிந்த இறகு - அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) பெயரெச்சம் ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) வினையெச்சம் ஈ) பண்புத்தொகை

விடைகள் : 1. அ) சிவராமலிங்கம் 2. ஆ) இலங்கை 3. இ) வாழ்வு
4. இ) பிரமிள் 5. ஈ) அடி எதுகை 6. ஆ) 2, 3, 4, 1 7. ஈ) ஓவியம், சிற்பம்
8. அ) பெயரெச்சம்

## அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக

1. **சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு .....ன் வாழ்வை எழுதிச் சென்றது.** தி.தேர்வு 2022

அ) பறவை ஆ) பஞ்சு இ) இலை ஈ) மேகம் **விடை: அ) பறவை**

2. **இறகுகளின் தொகுதி .................. எனப்படும்.** ஆகஸ்டு 2022

அ) பறவை ஆ) தோகை இ) சிறகு ஈ) நிலம் **விடை: இ) சிறகு**

☆☆☆

www.Padasalai.Net www.surabooks.com

இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# திருமலை முருகன் பள்ளு

- பெரியவன் கவிராயர் கவிதைப்பேழை

### கரு

✳ உழவர், உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும்.
✳ பள்ளு வேளாண்மை இலக்கியமாக திகழ்கிறது. அரிய பல செய்திகளைக் கொண்டு விளங்குகிறது.

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : பெரியவன் கவிராயர்
காலம் : 18ஆம் நூற்றாண்டு (பிற செய்திகள் எதுவும் அறியப்படவில்லை)

### நூற் குறிப்பு

தி.தேர்வு 2022

- திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் 'பண்பை' என்றும் 'பண்பொழில்' என்றும் அழைக்கப்படும்.
- இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை. குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திருமலை முருகன் பள்ளு பாடப்பட்டுள்ளது.
- இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பா வகைகள் விரவி வந்துள்ளன.
- இந்நூல் **பள்ளிசை** என்றும் **திருமலை அதிபர் பள்ளு** எனவும் வழங்கப்படுகிறது.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## சொல்லும் பொருளும்

1. வளருங் காவில் – தென்கரை நாட்டில் நீண்டு வளர்ந்த சோலையில்
2. முகில் தொகை ஏறும் – மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்
3. பொன் மாடம் எங்கும் – பொன்னாலான மாட மாளிகைகளில் எல்லாவிடத்திலும்
4. அகிற்புகை நாறும் – அகில் புகையின் நறுமணம் பரவிக் கொண்டே இருக்கும்
5. குளிரும் மஞ்ஞையும் – குளிர்ச்சியும் மயிலும்
6. கொண்டலும் காக்கும் – கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்
7. கோல்முறை மன்னர் – செங்கோலைக் கொண்ட மன்னர்
8. மண்டலங் காக்கும் – தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர்.
9. இளமின் னார்பொன் னரங்கில் நடிக்கும் – இளம் பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.
10. முத்து ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும் – இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வந்து கரையில் மோதும்போது சிதறி வெடிக்கும்.
11. அளியுலாம் கொன்றை சூடுங் குற்றாலத் – இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய
12. தென் ஐயன்தென்ஆரி நாடெங்கள் நாடே – தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றால நாதர் வீற்றிருக்கின்றார்.

## பொருளுரை

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் **மேகக் கூட்டங்கள்** தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் **அகில்புகை**யின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும். செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது **காவல்** காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.



## சொல்லும் பொருளும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆரளி | – | மொய்க்கின்ற வண்டு | 9. | முகில்தோகை | – | மேகக்கூட்டம் |
| 2. | இடங்கணி | – | சங்கிலி | 10. | மஞ்ஞை | – | மயில் |
| 3. | உளம் | – | உள்ளான் என்ற பறவை | 11. | கொண்டல் | – | கார்கால மேகம் |
| 4. | சலசவாவி | – | தாமரைத்தடாகம் | 12. | மண்டலம் | – | உலகம் |
| 5. | தரளம் | – | முத்து | 13. | வாவித்தரங்கம் | – | குளத்தில் எழும் அலை |
| 6. | வட ஆரிநாடு | – | திருமலை | 14. | அளியுலாம் | – | வண்டு மொய்க்கின்ற |
| 7. | கா | – | சோலை | 15. | தென் ஆரிநாடு | – | குற்றாலம் |
| 8. | இந்துளம் | – | இந்தளம் எனும் ஒரு வகைப் பண் | | | | |

## பள்ளு

உழவர், உழத்தியரின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர். வேளாண்மை இலக்கியமான பள்ளு, அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண் சங்கு, செங்கயல் | – பண்புத்தொகைகள் (தி.தேர்வு 2022) | 2. ஈன்ற சங்கு – பெயரெச்சம் |
| 3. | மஞ்ஞையும் கொண்டலும் | – எண்ணும்மை (தி.தேர்வு 2022) | 4. ஏந்தி – வினையெச்சம் |
| 5. | அகிற்புகை, முகில்தொகை | – ஆறாம் வேற்றுமைத்தொகைகள் | |
| 6. | கொன்றைசூடு | – இரண்டாம் வேற்றுமைத் தொகை | |
| 7. | ஏற்பவர் | – வினையாலணையும் பெயர் | |
| 8. | பாடும், மேயும், ஏறும், காக்கும், நீடிக்கும், வெடிக்கும் | – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம் | |



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores


### பகுபத உறுப்பிலக்கணம்

| ஈன்ற – ஈன் + ற் + அ (தி.தேர்வு 2022) | பெய்யும் – பெய் + ய் + உம் |
|---|---|
| ஈன் – பகுதி | பெய் – பகுதி |
| ற் – இறந்தகால இடைநிலை | ய் – உடம்படுமெய் சந்தி |
| அ – பெயரெச்ச விகுதி | உம் – பெயரெச்ச விகுதி |

### புணர்ச்சி விதிகள்

அ.மா.வி, மு.ப.இடைத்தேர்வு 2018, செப்.2021, மே 2022

1. **செங்கயல்** = செம்மை + கயல்
   விதி 1 : 'ஈறுபோதல்' எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு. செம்மை + கயல் = செம் + கயல் என்றானது.
   விதி 1 : 'முன்னின்ற மெய்திரிதல்' எனும் விதிப்படி செம் + கயல் = 'செங்கயல்' என்றானது.
2. **அகிற்புகை** = அகில் + புகை
   விதி 1 : 'லள வேற்றுமையில் வலிவரின் றடவும்' – அகிற் + புகை = அகிற்புகை என்றானது.
3. **பொன்னரங்கில்** = பொன் + அரங்கில்
   விதி 1 : 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – பொன் + ன் + அரங்கில்
   விதி 2 : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – பொன் (ன்+அ)ரங்கில் = பொன்னரங்கில் என்றானது.
4. **மண்டலங்காக்கும்** = மண்டலம் + காக்கும்
   விதி 1 : 'வன்மைக்கு இனமாத் திரிபவும்' – மண்டல + ங் + காக்கும் = மண்டலங்காக்கும் என்றானது.

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

### குறுவினா
கேள்வி எண்: 3 — புத்தக பக்கம் எண்: 52

காலாண்டுத் தேர்வு 2018, தி.தேர்வு 2022

3. **வளருங் காவில் முகில்தொகை ஏறும் – பொன்**
   **மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**
   தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும் என்பதே அடிக்கோடிட்ட தொடரின் பொருளாகும்.

### சிறுவினா
கேள்வி எண்: 3 — புத்தக பக்கம் எண்: 52

மார்ச் 2020, ஆகஸ்டு 2022

3. **"சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**
   (i) **இடம்** : "சலச வாவியில் செங்கயல் பாயும்" என்ற தொடர் திருமலை முருகன் பள்ளுவில் வடகரை நாட்டின் வளத்தைப் பற்றிப் பள்ளு கூறுவதாக அமைந்த தொடர் ஆகும்.
   (ii) **பொருள்** : தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
   (iii) **விளக்கம்** : வடகரை நாடு நீர் வளம் மிக்கது. அங்குள்ள நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில் செந்நிறமான கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றன என்று கவிஞன் வடகரை நாட்டின் நீர் வளத்தைப் பாடுகிறான்.

### நெடுவினா
கேள்வி எண்: 2 — புத்தக பக்கம் எண்: 53

2. **திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

ஜூன், காலாண்டுத் தேர்வு 2019, தி.தேர்வு & மே 2022

**முன்னுரை:**
96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பள்ளு. இது 'உழத்திப் பாட்டு' எனவும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச்சாரும். பள்ளுவில் கூறப்படும் வடகரை, தென்கரை நாட்டின் வளங்களை இங்குக் காணலாம்.

**வடகரை நாட்டின் இயற்கை வளம்:**
(i) வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும், வண்டின் இசைக்கேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(ii) தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும்.

(iii) மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும்.

(iv) இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற **திருமலைச் சேவகன்** வீற்றிருக்கின்றார்.

**தென்கரை நாட்டின் இயற்கை வளம்:**

(i) தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாட மாளிகைகளில் அகில் புகையின் நறுமணம் பரவிக் கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

(ii) செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.

(iii) இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.

(iv) இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றால நாதர் வீற்றிருக்கின்றார்.

**முடிவுரை :**

நெல் வகையை எண்ணினாலும் பள்ளு வகைகளை எண்ண முடியாது. வேளாண் இலக்கியமான பள்ளுவில் வடகரை, தென்கரை நாடான திருமலை மற்றும் குற்றாலத்தின் வளங்களை இன்புற கண்டோம்.

## கற்பவை கற்றபின்



**உங்கள் பள்ளி வளாகத்தின் இயற்கைச்சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஏற்ற திட்டம் ஒன்றை உருவாக்குக.**

**திட்டம் 1 :**

பள்ளி வளாகத்தை எங்கும் புற்களால் பசுமையாக்க வேண்டும். புற்களை நடவு செய்ய வேண்டும். பகலில் ஆக்ஸிஜன் காற்றைத் தருகின்ற வேப்ப மரம் நட வேண்டும். நல்ல சிந்தனைகளைத் தருகின்ற அரச மரத்தை நட வேண்டும்.

தினமும் புற்களுக்கும் மரங்களுக்கும் நீர் பாய்ச்ச வேண்டும். தினமும் தண்ணீர் ஊற்றி வந்தால் செடிகளும், புற்களும், மரங்களும் மிகவும் செழுமையாக வளரும். இதனால் நல்ல காற்று கிடைக்கும்.

பள்ளி வளாகத்திற்குள் மனிதனுக்குத் தேவைப்படும் மருத்துவ குணங்கொண்ட துளசி, கற்றாழை, கீழாநெல்லி, ஆடாதோடை, கற்பூரவள்ளி போன்ற மருத்துவக் குணம் கொண்ட செடிகளை நட்டுத் தினமும் தண்ணீர் பாய்ச்சி தன் கண் இமைபோல பராமரித்து வந்தால் நல்ல காற்றையும், சித்த மருந்தையும் நமக்குத் தரும். அதேபோல் பள்ளி வளாகம், பசுமையாகவும் அழகாகவும் காட்சித் தரும்.

இவற்றைப் பாதுகாக்க பள்ளி வளாகம் முழுக்க சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும். செடிகளைப் பராமரிக்க மாணவர்க்குழு அமைத்து அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இவை மாணவர்களுக்கு ஊக்கத்தையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் தரும் என்பதில் ஐயமில்லை.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **உழவர், உழத்தியரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை எளிய நடையில் விளக்குவது ..................**
அ) உலா ஆ) பள்ளு இ) தூது ஈ) பிள்ளைத் தமிழ்

2. **பள்ளு இலக்கியம் என்பது .................. இலக்கியம்.**
அ) பக்தி ஆ) அறிவியல் இ) நீதி ஈ) வேளாண்மை

3. **வடகரை நாடு என்பது..................**
அ) திருமலை ஆ) திருநெல்வேலி இ) குற்றாலம் ஈ) தூத்துக்குடி

4. **பள்ளு சிற்றிலக்கியத்தோடு தொடர்புடைய பழமொழி ..................**
அ) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்
இ) நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது.
ஈ) யானைக்கும் அடி சறுக்கும்.

5. **தென்கரை நாடு என்பது ..................**
அ) திருமலை ஆ) திருநெல்வேலி இ) குற்றாலம் ஈ) பண்புளிப்பட்டணம்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores





**சிறுவினா** கேள்வி எண்: 4 புத்தக பக்கம் எண்: 78

**4. சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது; இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.**

(i) சங்க காலத்தில் பெண்ணுக்கு மணமகன் பொன்பொருள் கொடுத்து மணம் செய்து கொண்டது புலப்படுகிறது. ஆனால் இக்காலத்தில் மணமகன் பெண்வீட்டாரிடம் பொருள் பெற்று, வரதட்சணை என்ற பெயரில் திருமணம் செய்யும் நிகழ்வு நடந்து வருகிறது.

(ii) சங்க காலத்தில் மணமகனின் பரிசுப் பொருள் போதவில்லை என்பதற்காகத் திருமணம் தடைபட்ட நிகழ்வு நடந்தது. ஆனால், இக்காலத்தில் மணமகள் வீட்டார் கொடுக்கும் பொருள் போதவில்லை என்பதற்காக மணமகன் வீட்டார் திருமணத்தைத் தடுக்கும் இழிநிலை காணப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

**1. திருமணங்களில் மணக்கொடை கேட்பது குற்றமே - விவாதிக்க.**

**விஜய் :** மணக்கொடை மணப்பரிசம், மணக்கூலி என்றெல்லாம் வழங்கப்படுகிறது. இது முழுக்க முழுக்க ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. இதனையே ஈ.வெ.ரா. பெரியார் பெருநோய் என்று கூறுகிறார். இதை அகற்ற வேண்டுமெனில் முதலில் இளைஞர்கள் மாற வேண்டும். மணமகனின் பெற்றோர் தன் மகனைப் பெற்றெடுத்து வளர்த்து அவனைப் படிக்க வைத்து வேலைக்குப் போகும் வரை ஆகின்ற செலவைப் பெண்வீட்டாரிடம் வரதட்சணை என்ற பெயரில் வாங்குகின்றனர்.

**கார்த்திக் :** அவ்வாறு பெறுவது ஒன்றும் தவறில்லை. ஒரு பெண் திருமணம் செய்து கொண்டு புதியதாக ஒரு வீட்டிற்கு வருகின்றாள். அவள் நல்ல முறையில் வாழ்வதற்குக் கொடுக்கும் பணமாக இருக்கட்டுமே. அதை ஏன் மணக்கொடை என்று வேறு சாயம் பூசுகிறீர்கள்.

**விஜய் :** இந்த மணக்கொடை என்பது கொடுமையான செயலாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் நம் தமிழ்நாட்டில் வரதட்சணை என்ற பழக்கம் இருந்ததில்லை. சங்க இலக்கியங்களில் சுட்டப்படவில்லை. இராமன்கூட வில்லை முறித்து அதன் மூலம் அவனுடைய ஆற்றலை வெளிப்படுத்தித்தான் சீதையை மணந்தார். சங்க நூல்களில்கூட வீரமுள்ள ஆண்மகனிடமே பெண்கள் தங்கள் மனதைத் தொலைத்தார்கள். அவர்களையே திருமணம் செய்து கொண்டனர். இன்று அவ்வாறு இல்லையே.

**கார்த்திக் :** பெண் வருத்தப்படுவதை எந்தத் தந்தையாலும் பார்த்துக் கொண்டிருக்க இயலாது. அதனால் பெண் எதற்காகவும் மணமகனிடம் இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்கக்கூடாது என எண்ணுகின்றார். அது மட்டுமின்றி பாத்திரங்கள், வீட்டிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கிக் கொடுப்பதால் பெண்ணிற்குத் தன் வீட்டில் உள்ளது போன்ற ஒரு எண்ணமே தோன்றும். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் பெண்ணின் பெற்றோர் மணமகன் வீட்டில் கேட்கும் அனைத்தையும் கொடுக்கிறார்கள். இதில் தவறொன்றுமில்லை.

**விஜய் :** பெண்கள் ஆண்களைவிட பலம் பொருந்தியவர்கள். அவர்கள் அனைத்துத் துறையிலும் வேலை செய்யும் அளவிற்கு அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள். இப்படிப்பட்ட இவர்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு மணமகன் இல்லத்தில் வீடு, நகைகள் ஆடம்பரப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் பல நேரங்களில் பெண்ணின் பெற்றோர் எல்லாவற்றையும் இழந்து அல்லல்படுகின்றனர். வாழ்க்கையே நரகமாகி விடுகிறது. பெண்ணின் வாழ்க்கை மட்டுமே அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. பெண் நன்றாக இருந்தால் போதும் என எண்ணி சிக்கலில் சிக்கிக் கொள்கிறார்கள். இதையெல்லாம் அறிந்தாவது இளைஞர்கள் மணக்கொடை பெறுவதைத் தடுக்க வேண்டும்.

**கார்த்திக் :** நீ கூறுவது முற்றிலும் சரி. பெண் வீட்டாரும் வரதட்சணை கொடுப்பது தவறு என உணர்ந்தால் இந்நிலை கட்டாயம் மாறும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

**1. குறுந்தொகை ..................... நூல்களுள் ஒன்று.**

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத் தொகை
இ) பதினெண் கீழ்க்கணக்கு ஈ) பதினெண் மேற்கணக்கு



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2.** குறுந்தொகை கடவுள் - வாழ்த்து நீங்கலாக .......... பாடல்கள் அமைந்துள்ளன.
அ) 400 ஆ) 402 இ) 401 ஈ) 403

**3.** குறுந்தொகை ........... திணை சார்ந்த நூலாகும்.
அ) அகம் ஆ) புறம் இ) குறிஞ்சி ஈ) முல்லை

**4.** குறுந்தொகை ................ எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது.
அ) சிறந்த குறுந்தொகை ஆ) எதுவுமில்லை இ) நல்லநறுந்தொகை ஈ) நல்ல குறுந்தொகை

**5.** உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் ..................
அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) கலித்தொகை

**6.** எட்டுத்தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பட்ட நூல்........
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) ஐங்குறுநூறு

**7.** எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகையைத் தொகுத்தவர் ...........
அ) நல்லந்துவனார் ஆ) பெருந்தேவனார் இ) பூரிக்கோ ஈ) வெள்ளிவீதியார்

**8.** குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் ................
அ) கபிலர் ஆ) பூரிக்கோ இ) வெள்ளிவீதியார் ஈ) பெருந்தேவனார்

**9.** வெள்ளிவீதியாரின் பாடல்கள் சங்கத்தொகை நூல்களில் ................ கிடைக்கின்றன.
அ) 11 ஆ) 18 இ) 401 ஈ) 13

**10.** 'அம்ம வாழி தோழி' என்ற பாடலடி இடம்பெற்ற நூல் ..............
அ) ஐங்குறுநூறு ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

**11.** பொருத்துக.
i) பிரிந்தோர் - 1. அடுக்குத் தொடர்
ii) நன்று நன்று - 2. வினையாலணையும் பெயர்
iii) சிதவல் - 3. ஊன்றுகோல்
iv) தண்டு - 4. தலைப்பாகை
அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 4, 3 இ) 3, 4, 1, 2 ஈ) 2, 3, 4, 1

**12.** பிரிந்தோர் - இச்சொல்லைப் பிரிக்கும் முறை...........
அ) பிரி + த்(ந்) + த் + ஓர் ஆ) பிரிந்து + ஓர் இ) பிரி + ந் + த் + ஓர் ஈ) பிரி +த்(ந்) + தோர்

**13.** 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்', 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' - இவ்விதிகளின்படி புணரும் சொல்.............
அ) வெண்டலை ஆ) தண்டுடை இ) விளக்கேற்றி ஈ) பூங்கொடி

**14.** 'நல்ல' என்ற அடைமொழி பெற்ற நூல்..............
அ) நற்றிணை ஆ) பரிபாடல் இ) புறநானூறு ஈ) குறுந்தொகை

**15.** 'பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ' - கூற்றைக் கூறியவர் யார்?
அ) தலைவி ஆ) தலைவன் இ) தோழி ஈ) வெள்ளிவீதியார்

**16.** 'அம்ம வாழி தோழி நம்மூர்' இப்பாடல் ................ பாவைச் சேர்ந்தது.
அ) நேரிசை ஆசிரிய ஆ) வெண் இ) வஞ்சி ஈ) இன்னிசை ஆசிரிய

விடைகள் :
**1.** ஆ) எட்டுத் தொகை **2.** இ) 401 **3.** அ) அகம்
**4.** ஈ) நல்ல குறுந்தொகை **5.** அ) குறுந்தொகை **6.** ஆ) குறுந்தொகை
**7.** இ) பூரிக்கோ **8.** ஈ) பெருந்தேவனார் **9.** ஈ) 13
**10.** இ) குறுந்தொகை **11.** ஆ) 2, 1, 4, 3 **12.** அ) பிரி + த்(ந்) + த் + ஓர்
**13.** ஆ) தண்டுடை **14.** ஈ) குறுந்தொகை **15.** அ) தலைவி
**16.** அ) நேரிசை ஆசிரிய

## சிறுவினா

**1.** குறிஞ்சித் திணையை விளக்குக.

முதற்பொருள் : மலையும் மலை சார்ந்த இடமும்
பொழுது : சிறுபொழுது - யாமம், பெரும்பொழுது - கூதிர், முன்பனி





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**கருப்பொருள் :**

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | – முருகன் | நீர் | – சுனை, அருவி நீர் |
| மக்கள் | – குறவர், குறத்தியர், கானவர் | பறை | – வெறியாட்டுப் பறை, தொண்டகப்பறை |
| பறவை | – கிளி, மயில் | யாழ் | – குறிஞ்சியாழ் |
| விலங்கு | – புலி, கரடி, சிங்கம், யானை | பண் | – குறிஞ்சிப் பண் |
| ஊர் | – சிறுகுடி | உணவு | – மலை நெல், மூங்கிலரிசி |
| மரம் | – அகில், சந்தனம், வேங்கை | தொழில் | – தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் |

**உரிப்பொருள் :** புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

**சான்று :** 'அம்ம வாழி தோழி நம்மூர்ப்' என்ற குறுந்தொகைப் பாடல்.

**துறை விளக்கம் :** தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. ''நன்று நன்று'' – சொல்லின் இலக்கணக் குறிப்பு** காலாண்டுத் தேர்வு 2018

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்
இ) உரிச்சொற்றொடர் ஈ) வினையெச்சம்

**விடை: ஆ) அடுக்குத்தொடர்**

**2. 'தண்டுடைக் கையர் வெண்டலைச் – சிதவலர் நன்று நன்றென்றும் மாக்களொடு' இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?** காலாண்டுத் தேர்வு 2019

இவ்வடிகள் இடம் பெற்ற நூல் – குறுந்தொகை, ஆசிரியர் – வெள்ளிவீதியார்.

☆☆☆



இயல் 3 — பீடு பெற நில் – பண்பாடு

# புறநானூறு

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி — கவிதைப்பேழை

## கரு

✳ தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்குவது புறநானூறு. வாழ்க்கையின் சிறந்த தத்துவங்களைப் பேசுவதோடு தமிழரின் வீரத்தையும் காதலையும் பேசுகிறது.

✳ கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் இப்பாடல் இந்த உலகம் இன்றுவரை உயிரோடு இருப்பதற்கான காரணத்தை அழகாகக் கூறுகிறது.

## ஆசிரியர் குறிப்பு

- **கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி :**
  - (i) பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்காலமக்கள், இவரை இளம் பெருவழுதி என்று அழைத்தனர்.
  - (ii) கடற்பயணம் ஒன்றில் இறந்து போனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

## நூற் குறிப்பு

- புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.
- புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும் அகவற்பாக்களால் ஆனது.
- புறநானூற்றுப்பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## பாடல்



உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (182) – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

## சொல்லும் பொருளும்

1. உண்டால் அம்ம இவ்வுலகம் – இந்த உலகம் இன்றுவரை நிலையாக இருக்கிறது. ஏனென்றால்
2. இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் – இந்திரன் முதலான தேவர்களுக்கு உரிய உணவாகிய அமுதமே கிடைத்தாலும்
3. இனிது எனத் தமியர் உண்டலும் இலரே – அஃது உயிரைக் காக்கும் என்பதற்காக யாருக்கும் கொடுக்காமல் தனியாக உண்ண மாட்டார்கள்.
4. முனிவிலர் – யாரையும் வெறுக்கமாட்டார்கள்
5. துஞ்சலும் இலர் – சோம்பலால் தனக்கும் பிறருக்கும் கெடுதலே நேரும். ஆகவே அப்படிப்பட்ட சோம்பலை நீக்கியவர்.
6. பிறர் அஞ்சுவது அஞ்சிப் – பிறர் அஞ்சத் தகுந்தவற்றிற்கு தாமும் அஞ்சிலர் (அதாவது பழிபாவங்கள் செய்வதற்கு அஞ்சுதல்)
7. புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் – புகழுக்காக தம் உயிரையும் கொடுப்பர். (அதாவது நன்மைகள் நடப்பதாக இருந்தால் தம் உயிரையும் கொடுத்து அதை நடத்துவர்.)
8. பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் – இந்த உலகையே தருவதாகச் சொன்னாலும் பழி ஏற்படக்கூடிய செயலைச் செய்ய விரும்ப மாட்டார்கள்.
9. அயர்விலர் – மனதில் கவலையோ, வருத்தமோ இல்லாதவர்கள்
10. அன்ன மாட்சி அனையர் ஆகி – மேற்சொன்ன சிறந்த குணங்களைக் கொண்டவராகி
11. தமக்கென முயலா – தம் வாழ்வுக்காக சுயநலத்தோடு வாழாமல்
12. நோன்தாள் – மிகுந்த வலிய முயற்சியினை மேற்கொண்டு
13. பிறர்க்கென முயலுநர் உண்மையானே – பிறருக்காகப் பொது நலம் கொண்டு உதவி செய்பவர்களால்தான் இந்த உலகம் இன்றுவரை நிலையாக இருக்கிறது.

## பொருளுரை

இந்த உலகம் இன்றுவரை நிலைபெற்று இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், இந்திரன் முதலான தேவர்களுக்கு உரிய உணவாகிய அமுதமே கிடைத்தாலும், அஃது உயிரைக் காக்கும் என்பதற்காக யாருக்கும் ஈயாமல் தனியாக உண்ணமாட்டார். யாரையும் வெறுத்து ஒதுக்க மாட்டார். சோம்பலை நீக்கியவர். பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சி பழி பாவங்கள் செய்யாது இருப்பர். புகழுக்காகத் தம் உயிரையும் கொடுப்பர். இந்த உலகைப் பரிசாகக் கொடுப்பதாயினும் குற்றம் தரும் செயல்களைச் செய்யமாட்டார். மனதில் சிறிதும் வருத்தம் இல்லாதவர். தனக்கு மட்டும் முயற்சியோ உதவியோ செய்யாமல் தமது வலிய முயற்சியால் பிறருக்கு உதவி வாழ்வார். இப்படிப்பட்டவர்களால்தான் இந்த உலகம் இன்று வரை நிலைபெற்று வாழ்கிறது.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| 1. தமியர் – தனித்தவர் | 2. முனிதல் – வெறுத்தல் | 3. துஞ்சல் – சோம்பல் |
| 4. அயர்வு – சோர்வு | 5. மாட்சி – பெருமை | 6. நோன்மை – வலிமை |
| 7. தாள் – முயற்சி | 8. அனையர் – போன்றவர் | 9. இயைவது – கிடைப்பது |
| 10. பழி – குற்றம் | 11. பெறினும் – பெற்றாலும் | 12. அன்ன – அவ்வாறு |
| 13. உண்டால் – உயிர்த்திருக்கிறது | | |





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. அம்ம – அசைநிலை | 2. உண்டல், துஞ்சல் தி.தேர்வு 2022 – தொழிற்பெயர்கள் |
| 3. முயலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் | |

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **துஞ்சல் – துஞ்சு + அல்** | **முனிவிலர் – முனி + வ் + இல் + அர்** (அ.மா.வி 2018, தி.தேர்வு 2022) |
| துஞ்சு – பகுதி | முனி – பகுதி |
| அல் – தொழிற்பெயர் விகுதி. | வ் – உடம்படுமெய் சந்தி |
| | இல் – எதிர்மறை இடைநிலை |
| | அர் – பலர்பால் வினைமுற்று விகுதி |

## புணர்ச்சி

1. **இயைவதாயினும் = இயைவது + ஆயினும்** (மே 2022)

‘ உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்’ எனும் விதிப்படி வருமொழி முதலில் உயிர் (ஆ) வந்ததால் நிலைமொழி ஈற்று உகரம் (து – ந் + உ) கெட்டு இயைவத் + ஆயினும் என்றானது. பின்பு

‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ எனும் விதிப்படி நிலைமொழி ஈற்று மெய்யும் (த்) வருமொழி முதல் உயிரும் (ஆ) புணர்ந்து (த்+ஆ=தா) இயைவதாயினும் என்றானது.

2. **புகழெனின் = புகழ் + எனின்** (செப். 2020, தி.தேர்வு 2022)

‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று மெய்யும் (ழ்) வருமொழி முதல் உயிரும் (எ) புணர்ந்து (ழ்+எ=ழெ) புகழெனின் என்றானது.

3. **உயிருங்கொடுக்குவர் = உயிரும் + கொடுக்குவர்**

‘ வன்மைக்கு இனமாத் திரிபவும்’ எனும் விதிப்படி உயிருங்+கொடுக்குவர்= உயிருங்கொடுக்குவர் என்றானது.

4. **உலகுடன் = உலகு + உடன்**

‘ உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்’ எனும் விதிப்படி உலக் + உடன் என்றானது.

‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ எனும் விதிப்படி உல(க்+உ)டன் = உலகுடன் என்றானது.

5. **அயர்விலர் = அயர்வு + இலர்**

‘ முற்றும் அற்று ஒரோ வழி’ எனும் விதிப்படி அயர்வ் + இலர் என்றானது.

‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ எனும் விதிப்படி அயர(வ்+இ)லர் = அயர்விலர் என்றானது.

6. **பழியெனின் = பழி + எனின்**

‘ இ ஈ ஐ வழி யவ்வும்’ எனும் விதிப்படி பழி + ய் + எனின் என்றானது.

‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ எனும் விதிப்படி பழி+(ய்+எ)னின் = பழியெனின் என்றானது.

### நினைவில் கொள்க :

சொல்லைப் பிரிக்கும்போது நிலைமொழியின் இறுதியில், கு, சு, டு, து, பு, று ஆறனுள் ஒன்று வந்து, வருமொழியில் உயிரெழுத்து வந்தால், ‘ உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்’ – என்ற விதியைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த விதிக்குப் பிறகு ‘ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதி தான் வரும்.

‘ய்’ – வேண்டுமெனில், ‘இ ஈ ஐ வழி யவ்வும்’ என்ற விதியும்,

‘வ்’ – வேண்டுமெனில் “ஏனைய உயிர்வழி யவ்வும்” என்ற விதியும் (உடம்படுமெய்களாக) வரும்.

கு, சு, டு, து, பு, று அல்லாத வேறு உகரங்கள் நிலைமொழியின் ஈற்றில் வந்து, வருமொழியில் உயிர்வரின் “முற்றும் அற்று ஒரோ வழி” என்ற விதியைப் பயன்படுத்த வேண்டும்.

இயல் 3



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

**பலவுள் தெரிக** கேள்வி எண்: 3, 4 புத்தக பக்கம் எண்: 77

**3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | வெள்ளிவீதியார் | - | அ) | புறநானூறு |
| 2) | அண்ணாமலையார் | - | ஆ) | சி.சு. செல்லப்பா |
| 3) | வாடிவாசல் | - | இ) | குறுந்தொகை |
| 4) | இளம்பெருவழுதி | - | ஈ) | காவடிச்சிந்து |

i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ

**விடை: iii) இ ஈ ஆ அ**

**4. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.** மே 2022

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

**விடை: அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

**குறுவினா** கேள்வி எண்: 4 புத்தக பக்கம் எண்: 77

**4. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

கா. தேர்வு 2018, மார்ச், அரை.தேர்வு 2019, மார்ச் 2020, தி.தேர்வு 2022, ஆகஸ்டு 2022

(i) தமிழர்கள் **புகழ்** வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்.

(ii) **பழி** வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார் என்று புறநானூறு கூறுகிறது.

**சிறுவினா** கேள்வி எண்: 5 புத்தக பக்கம் எண்: 78

**5. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.** கா.தேர்வு 2018, மே 2022

(i) விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (82)

**பொருள் :** விருந்தினர் வந்து புறத்தே நிற்கும்போது தான் மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் விரும்பத்தக்கது அன்று.

(ii) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (428)

**பொருள் :** அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சுவது அறிவுடையவர்களின் செயலாகும். அவ்வாறு அஞ்ச வேண்டிவற்றிற்கு அஞ்சாமல் இருப்பது அறிவற்றவரின் செயலாகும்.

(iii) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

**பொருள் :** தான் முயற்சி செய்து ஈட்டிய செல்வமனைத்தும், தகுதியுடையார்க்குக் கொடுத்து உதவி செய்வதற் பொருட்டேயாம்.

(iv) பண்புடையார்;ப பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். (996)

**பொருள் :** பண்புடையவர்கள் இவ்வுலகில் வாழ்வதினால்தான் இவ்வுலகம் அழியாமல் நிலை பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

**1. உலகியல் கருத்துகளைப் பேசும் ஏதேனும் ஓர் இலக்கியப் பாடலின் நயமும் சொல்லும் பொருளும் குறித்து வகுப்பில் பேசுக.**

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று. (204)

இந்தப் பாடல் புறநானூறு நூலின் இருநூற்று நான்காம் பாடலாகும். இந்தப் பாடலில் எதுகை, மோனை, இயைபு போன்றவை பெற்று வந்துள்ளதால் படிப்பதற்கும், கேட்பதற்கும் இனிமையான பாடலாகும்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



ஈ என்று இரத்தலும், ஈயேன் என்று மறுத்தலும் இழிவாகும். இரப்பவரின் உள்ளக் குறிப்பை அறிந்து கொள் எனக் கொடுப்பது உயர்வு என்றும் சொல்லி, இவற்றுள் நீ விரும்பியதைச் செய்க என்று புலவர் குறிப்பிடுகிறார். ஈ என்பது இழிந்த ஒருவன் உயர்ந்தவனிடத்து இரந்து கேட்கும்போது சொல்லக்கூடிய சொல்லாகும். வறியவன் ஒருவன் தன் வறுமையைச் சொல்லி இரப்பதால் உண்டாவது இழிவே அல்லாது வேறில்லை. ஆனால் அவனுக்கு இல்லை என்று சொல்லுபவன் தன்னிடம் பொருள் இல்லை என்று சொல்லும் இழிவுடனே பொய் கூறிய இழிவும் அவனைச் சேரும். ஆதலால் 'ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று" என்றார்.

ஏற்பவர் ஈ என்று கேட்பதற்கு முன்பே கொள்வாயாக! என்று அவர்க்குச் சொல்லிக் கொடுத்தால், அது மற்றவரிடம் உள்ள இழிவை மறைத்துப் பாதுகாப்பதால், புகழ் உண்டாகி உயர்வு தரும். எனவே "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று" என்றார். "கொள்ளேன் எனக் கூறுவதால் பிறக்கும் பெருமிதம். கொடுக்கப்படுகின்ற பொருள் மற்றவர்க்குக் கொடுக்கப்பட்டுப் பயன்படுகின்ற முறையால் ஏற்படும் புகழைவிட மேன்மையுறுவதால் "அதனினும் உயர்ந்தன்று" என்றார்.

| இழிந்தன்று – இழிந்தது; உயர்ந்தன்று – உயர்ந்தது. |
|---|

**2.** **உங்களுக்குத் தெரிந்த, நீங்கள் கேள்வியுற்ற ''பிறர்க்கென முயலுநர்'' எவரேனும் ஒருவர் குறித்த தகவல்களைத் திரட்டிக் கட்டுரை உருவாக்குக.**

### பெருந்தலைவர் காமராஜர்

**முன்னுரை :** 'தென்னாட்டு காந்தி' என்று அன்போடு மக்களால் அழைக்கப்படுபவர் கர்மவீரர் காமராஜர். தன்னலம் கருதாது பொதுநலம் கருதிய தலைவர்களுள் ஒருவர். இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து தன்னிகரில்லாத தலைவராக உயர்ந்த உத்தமர்.

**இளமைப் பருவம் :** 1903–ஆம் ஆண்டு விருதுநகரில் குமாரசுவாமி – சிவகாமி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். அதனால் பலமுறை சிறைச்சாலைக்கும் சென்றவர். வறுமையின் காரணமாக கல்வி கற்காதவர் காமராஜர்.

**தமிழக முதலமைச்சர் :** தான் முதல்வராய் பதவி வகித்த காலத்தில் ஓர் கிராமத்தில் ஏழைச் சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அச்சிறுவனிடம், பள்ளிக்கூடம் போய் படிக்காததன் காரணத்தைக் கேட்டார்.

அந்தச் சிறுவனோ, "பள்ளிக்கூடம் போனால் எனக்கு உணவு கிடைக்காது. மாடு மேய்த்தால்தான் எனக்கு உணவு கிடைக்கும்" என்று பதில் சொன்னான். அந்தப் பதில் காமராஜரின் உள்ளத்தைத் தைத்தது. பள்ளிக்கூடத்தில் உணவு கிடைத்தால்தான் ஏழை மாணவர்களும் கல்வி கற்க வருவார்கள் என்ற எண்ணம் பிறந்தது. உடனே தமிழகத்தின் அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் மதிய உணவை இலவசமாக வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். இவர் தன் வாழ்நாளில் திருமணமே செய்து கொள்ளாமல் பிறர்க்கெனவே வாழ்ந்தார்.

**சிறப்புப் பெயர்கள் :** தன்னலம் கருதாது நாட்டு மக்களின் நலம் ஒன்றை பெரிதும் நினைத்து பாடுபட்டார். அதனால்தான் காமராஜரைக் "கர்மவீரர்", "கருப்புக் காந்தி", 'பெருந்தலைவர்", "ஏழைகளின் நண்பன்" என்று மக்கள் சிறப்புப் பெயர்கள் கூறி அழைத்தனர்.

**முடிவுரை :** மக்களின் பெருமதிப்பிற்கும் மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராஜர் 1975–ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார். ஆனாலும் இன்னும் மக்களின் மனதை விட்டு நீங்காதவர்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1.** **புறநானூறு .............. நூல்களுள் ஒன்று.**

அ) பதினெண்மேற்கணக்கு ஆ) எட்டுத்தொகை
இ) பதினெண்கீழ்கணக்கு ஈ) பத்துப்பாட்டு

**2.** **புறநானூறு பிரிக்கும் முறை..................**

அ) புறம்+நான்கு+நூறு ஆ) புறம் + நான்குநூறு
இ) புறம் + நானூறு ஈ) புற + நான்கு + நூறு





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**3.** **புறம், புறப்பாட்டு என வழங்கப்படும் நூல் ...................**
அ) குறுந்தொகை ஆ) பரிபாடல் இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து

**4.** **புறநானூறு ............... ஆல் ஆனது.**
அ) கலிப்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) ஆசிரியப்பா

**5.** **சங்க கால அரசர்களையும் மக்களின் சமூக வாழ்க்கைப் பற்றியும் கூறும் நூல் ............**
அ) கலித்தொகை ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

**6.** **'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' புறநானூற்றில் பாடிய பாடல்களின் எண்ணிக்கை..................**
அ) நான்கு ஆ) இரண்டு இ) ஒன்று ஈ) ஏழு

**7.** **'இளம்பெருவழுதி' – பெயர்க்காரணம்?**
அ) அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளம் பருவத்திலே பெற்றதால்
ஆ) அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக் காலத்தில் பெறாததால்
இ) முதுமைப் பருவம் வரையிலும் பண்புகளைப் பெற்றதால்
ஈ) இளமைக்காலத்தில் கடல் பயணத்தில் இறந்துவிட்டால்

**8.** **தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும் எட்டுத் தொகை நூல்...................**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

**9.** **புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ...........**
அ) கால்டுவெல் ஆ) எல். ஹார்ட் இ) வின்சன் ஈ) ஜி.யு.போப்

**10.** **புறநானூறு முழுமையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் .........**
அ) விண்ஸ்லோ ஆ) ஜி.யு. போப் இ) ஜார்ஜ். எல்.ஹார்ட் ஈ) சீகன்பால்

**11.** **வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளைக் கூறுவது..........**
அ) பொதுவியல் ஆ) முல்லைத்திணை இ) கைக்கிளை ஈ) குறிஞ்சித்திணை

**12.** **புறநானூற்றின் பல சுவடிகளை உ.வே.சா முதன்முதலாக அச்சில் பதிப்பித்த ஆண்டு..............**
அ) 1984 ஆ) 1894 இ) 1874 ஈ) 1864

**13.** **பொருத்துக.**
i) முனிதல் – 1. சோர்வு
ii) துஞ்சல் – 2. பெருமை
iii) அயர்வு – 3. வெறுத்தல்
iv) மாட்சி – 4. சோம்பல்
அ) 3, 4, 1, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 3, 4, 1

**14.** **பொருத்துக.**
i) அம்ம – 1. வினையாலணையும் பெயர்
ii) உண்டல் – 2. அசைநிலை
iii) முயலா – 3. தொழிற்பெயர்
iv) கொடுக்குவர் – 4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 3, 4, 1 ஈ) 4, 2, 1, 3

**15.** **'தமக்கென முயலா நோன்தாள்' – இவ்வடியில் தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்புத் தருக.**
அ) அசைநிலை ஆ) பெயரெச்சம்
இ) தொழிற்பெயர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**16.** **இயைவதாயினும் – புணர்ச்சி விதி தருக.**
அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இ) முற்றும் அற்று ஒரோ வழி, உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஈ) ஈறுபோதல், இனமிகல்





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



விடைகள் : 1. ஆ) எட்டுத்தொகை 2. அ) புறம்+நான்கு+நூறு 3. இ) புறநானூறு
4. ஈ) ஆசிரியப்பா 5. ஆ) புறநானூறு 6. இ) ஒன்று
7. அ) அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளம் பருவத்திலே பெற்றதால்
8. ஆ) புறநானூறு 9. ஈ) ஜி.யு.போப் 10. இ) ஜார்ஜ். எல்.ஹார்ட்
11. அ) பொதுவியல் 12. ஆ) 1894 13. அ) 3, 4, 1, 2
14. இ) 2, 3, 4, 1 15. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
16. ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

## குறுவினா

**1. புறநானூறு தெரிவிக்கும் செய்தி யாது?**

(i) புறநானூற்றுப் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன.

(ii) தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு, வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது.

**2. புறநானூறு – நூற்குறிப்பு தருக.**

(i) புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.
(ii) இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
(iii) புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படுகிறது.

**3. புறநானூற்றை முதன்முதலாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டவர் யார்?**

சுவடிகளில் எழுதிப் பயன்படுத்தப்பட்டு அழிந்து போகும் நிலையில் இருந்த புறநானூற்றின் பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து பயன்பெறும் வகையில், உ.வே.சா அவர்கள் 1984ஆம் ஆண்டு முதன்முதலாக இந்நூலை அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.



www.Padasalai.Net

## சிறுவினா

**1. 'புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :** புறநானூற்றில், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் இயற்றிய 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் பாடலில் இவ்வடிகள் இடம் பெற்றுள்ளன.

**பொருள்:** புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள், உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

**விளக்கம்:** தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள். அமிழ்தம் கிடைத்தாலும் தனியாக உண்ண மாட்டார்கள். யாரையும் வெறுக்க மாட்டார்கள். சோம்பல் இன்றிச் செயல்படுவார்கள் பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ்வார்கள். இப்படிப்பட்டவர்கள் புகழ்வரும் என்றால் உயிரையும் கொடுப்பார்கள். பழிவரும் என்றால் உலகம் பழிக்கும் செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

## சிறுவினா

**1. தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் புறநானூறு கூறும் கருத்துகளை எழுதுக. (அல்லது) "உண்டால் அம்ம இவ்வுலகம்" – என்ற பாடல்வழி கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறும் கருத்துக்கள் யாவை? (அல்லது) இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கான காரணங்களாக இளம்பெருவழுதி கூறுவனவற்றை எழுதுக.**

முப.இடைத்தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2019, தி.தேர்வு 2022

(i) தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள். இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க் காப்பது என்பதற்காகத் தனித்து உண்ணமாட்டார்கள். யாரையும் வெறுக்க மாட்டார்கள். சோம்பலின்றிச் செயல்படுவார்கள்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

**20.** **நேர்வழி மாறாது அடக்கமாக இருப்பவனின் உயர்வு ......................**

அ) மலையை விடப் பெரியது ஆ) உலகை விடப் பெரியது

இ) கடலை விடப் பெரியது ஈ) வானை விடப் பெரியது

**21.** **சொல் பின்வருநிலையணிக்கான குறளைத் தேர்க.**

அ) சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.

இ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.

ஈ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்.

விடைகள் :

1. ஆ) திருவள்ளுவமாலை
2. அ) திருக்குறள்
3. ஈ) பதினெண் கீழ்க்கணக்கு
4. இ) 9
5. ஆ) மூன்று
6. இ) 38
7. ஈ) 25
8. அ) 70
9. ஆ) சிறப்பதிகாரம்
10. அ) குறள் வெண்பா
11. இ) 10
12. இ) பரிமேலழகர்
13. அ) திருக்குறள்
14. அ) 2, 3, 1
15. ஆ) வேற்றுமையணி
16. இ) உவமை அணி
17. அ) துறவறவியல்
18. ஆ) கற்பியல்
19. இ) களவியல், கற்பியல்
20. அ) மலையை விடப் பெரியது
21. ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.

இயல் 3

**சிறுவினா**

**1.** **திருக்குறள் பற்றிக் குறிப்பு வரைக.**

(i) இது உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் வாழ்வியல் நூல். 133 அதிகாரங்களைக் கொண்ட நூல் இது. 1330 குறள்பாக்களால் ஆனது.

(ii) உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் அனைத்தும் குறள் வெண்பா என்னும் பாவகையால் ஆனது.

(iii) பாவின் வகையைத் தன் பெயராகக் கொண்டு உயர்வு விகுதியாகத் 'திரு' என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(iv) திருக்குறளுக்குப் பத்து பேருடைய உரை இருப்பதாகப் பழம் பாடல் ஒன்று கூறுகிறது. பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் வரையிலும் பலர் உரை எழுதும் சிறப்புப் பெற்றது இந்நூல். திருக்குறளின் சிறப்பினை விளக்கப் பல புலவர்கள் பாடிய பாடல்களால் தொகுக்கப்பட்ட நூலே திருவள்ளுவமாலை.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக**

**1.** **'பற்றுக பற்றற்றான்' என்ற குறட்பாவில் பயின்று வரும் அணி..................** மு.ப.இடைத்தேர்வு 2018

அ) பிறிது மொழிதல் அணி ஆ) வேற்றுமையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) உவமையணி **விடை: இ) சொற்பொருள் பின்வருநிலையணி**

**2.** **ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல - இக்குறள் பெற்றுள்ள அதிகாரம் எது?** தி.தேர்வு 2022

அ) துறவு ஆ) நிலையாமை இ) தவம் ஈ) தவம் **விடை: ஆ) நிலையாமை**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



### சிறுவினா

1. **சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு – இக்குறட்பாவில் இடம் பெறும் அணி யாது? இதற்கு விளக்கம் தருக.**

அ.தேர்வு 2018, செப். 2020, தி.தேர்வு & மே 2022

இக்குறட்பாவில் இடம்பெறும் அணி உவமையணியாகும்.

**உவமை அணி என்பதன் விளக்கம்:** உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் நிற்க, அவற்றிற்கிடையே 'போல' என்ற பொருள் தரும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**பாடலின் பொருள்:** புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த ஞானம் வளரும்.

**அணி விளக்கம்:** இக்குறட்பாவில் வள்ளுவப் பெருமான் 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்' என்பதனை உவமையாகவும் துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு உவமேயமாகவும் அமைத்து அவற்றிற்கிடையே 'போல' என்ற உவம உருபு வெளிப்படையாக வருமாறு அமைத்திருப்பதால் இக்குறட்பா உவமை அணிக்கு எடுத்துக்காட்டாகும்.

2. **பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.**

அ.மா.வி 2018, மார்ச், அ.தேர்வு 2019, ஆகஸ்டு 2022

**அணி விளக்கம் :** புலவர் தாம் கூறக் கருதிய பொருளை நேரே கூறாமல் அதனோடு ஒப்புமை உடைய பிறிதொரு பொருளைக் கூறி, தாம் சொல்லக் கருதியதைக் குறிப்பாகப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும். அதாவது, புலவர் உவமையைக் கூறி உவமேயத்தைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும். ஒட்டணி, நுவலா நுவற்சி அணி, சுருங்கச் சொல்லல் அணி, தொகை மொழி அணி என்பன இதன் வேறு பெயர்களாம்.

**அணி அமைந்த பாடல் :**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

**அணி விளக்கம் :** மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் வலிமையான வண்டியின் அச்சும் முறிந்துவிடும். இந்த உவமையிலிருந்து வலியவரை எளியவர் பலர் கூடி வென்றுவிடுவர் என்னும் உவமேயம் பெறப்படுகிறது. அதனால், இது பிறிது மொழிதல் அணியாகும்.

3. **பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. –இக்குறளில் பயின்றுவரும் அணி யாது? விளக்குக.**

காலாண்டுத் தேர்வு 2019, செப். 2020

இக்குறளில் பயின்றுவரும் அணி 'சொல் பின்வருநிலையணி' ஆகும்.

**அணி விளக்கம் :**

புலவர் தாம் இயற்றும் செய்யுளில் ஓரிடத்தில் வந்த சொல்லையே மீண்டும் மீண்டும் அதே பொருளில் வருமாறு அமைப்பது சொல் பின்வருநிலையணி எனப்படும்.

**அணி அமைந்த பாடல் :**

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**இப்பாடலின் பொருள் :**

எந்தப் பொருள் மீது ஆசை கொள்ளாது விளங்கும் இறைவனது அன்பை மட்டும் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். உலகப் பொருள்களின் மீது உண்டாகும் பிற ஆசைகளை விடுவதற்கும் இறைவனையே பற்றி நிற்க வேண்டும்.

**அணிப் பொருத்தம் :**

இக்குறட்பாவில் வள்ளுவர் 'பற்றுக' என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் 'இறுகப்பற்றி' என்னும் ஒரே பொருளைத் தருமாறு அமைத்திருப்பதால் இக்குறட்பா சொல் பின்வருநிலையணிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

☆☆☆



www.Padasalai.Net www.surabooks.com



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores


## கணப்பொழுதில் ஒரு விரைவுப் பார்வை: 1 மதிப்பெண் வினா-விடைகள்

1. திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்று அழைத்தவர் யார்? கமில் சுவலபில்
2. 'கோட்டா' என்னும் திராவிடப் பழங்குடி இனக்குழு வாழும் பகுதிகள் நீலகிரி, தமிழ்நாடு
3. 'கொண்டா தோரா' இனக்குழு உள்ள பகுதி எது? ஆந்திரப்பிரதேசம்
4. கோண்டு, கொய்டெர்- இனக்குழுவினர் வாழும் பகுதி எது? ஒடிசா
5. குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் எது? மெட்டு
6. 'ஜதாப்பு' என்னும் திராவிடப் பழங்குடியினர் எங்குள்ளனர்? ஆந்திரா, ஒடிசா
7. 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டவன் யார்? பாண்டிய மன்னன்
8. இந்தியாவில் கோட்டை என்று முடியும் இடப்பெயர்களின் எண்ணிக்கை 248 தமிழ்நாட்டில் தான் உள்ளன.
9. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டு வந்த இந்திய ஆட்சிப் பணியாளர் யார்? ஆர்.பாலகிருஷ்ணன்
10. அன்புள்ள, அம்மா, சிறகுக்குள் வானம் என்ற நூல்களின் ஆசிரியர் ஆர்.பாலகிருஷ்ணன்
11. தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபு காவடிச்சிந்து
12. முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலையார்
13. "காவடிச்சிந்தின் தந்தை" என அழைக்கப்பட்டவர் சென்னிகுளம் அண்ணாமலையார்
14. அண்ணாமலையார் இயற்றிய அந்தாதி நூல்கள் இரண்டு சங்கரன்கோவில் திரிபந்தாதி, கோமதி அந்தாதி
15. கனல் ஏறிய மெழுகாய் வருபவர்கள் முருக பக்தர்கள்
16. திருப்புகழைப் பாடியவர் அருணகிரிநாதர்
17. கழுகாசலம் என்பதன் பொருள் கழுகுமலை
18. குறுந்தொகையில் உள்ள பாடல்கள் 401
19. குறுந்தொகை நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ
20. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
21. "நம்மூர்ப் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ" என்ற பாடலைப் பாடியவர் வெள்ளி வீதியார், நூல் குறுந்தொகை (146)
22. சங்கத்தொகை நூல்களில் வெள்ளிவீதியாரால் பாடப்பட்ட பாடல்கள் 13
23. 'சிதவல்' என்பதன் பொருள் தலைப்பாகை
24. குறுந்தொகை எத்திணை நூல்? அகத்திணை
25. தமிழரின் வாழ்வியல் கருவூலம் புறநானூறு
26. புறநானூறு பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட்
27. புறநானூறு பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்
28. 'துஞ்சல்' என்பதன் பொருள் சோம்பல்
29. 'ஒப்புரவு' என்பதன் பொருள் உயிருக்கு உதவுவது
30. 2001ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற சி.சு. செல்லப்பாவின் புதினம் எது? சுதந்திர தாகம்
31. 'ஏறுதழுவல்' பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் எது? கலித்தொகை
32. வாடிவாசல் 'பிச்சி' அடக்கிய காளையின் பெயர் என்ன? காரி
33. தமிழ் எத்தகைய மொழி? ஒட்டுநிலை மொழி
34. ஒருமொழியின் அடிப்படையான வேர்ச்சொல் எது? பகுதி
35. ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக மாற்றம் அடைவதற்குப் பெயர் யாது? விகாரம்
36. விகுதி பெறாத ஏவல் வினையாக வருவது எது? பகுதி
37. சந்தி என்பதற்குத் தமிழில் என்ன பெயர்? புணர்ச்சி
38. பகுபதத்தில் 'முதனிலை' என்றழைக்கப்படுவது எது? பகுதி

☆☆☆


www.surabooks.com www.Padasalai.Net

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

இயல் 4 கேடில் விழுச்செல்வம் - கல்வி

# தமிழகக் கல்வி வரலாறு

உரைநடை உலகம்

**கரு**

* கல்வியின் நோக்கம் நாகரீகத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதாகும்.
* தனிமனிதனை இந்தச் சமுதாயத்திற்கு ஏற்புடையவனாக மாற்றுதலே கல்வியின் பயனாகும்.
* 'ஒரு பள்ளியின் கதவு திறக்கும்போது ஒரு சிறையின் கதவு மூடப்படுகிறது' என்று 'விக்டர் ஹ்யூகோ' கூறுவதுபோல் மனிதனை குற்றத்திலிருந்து காப்பது கல்வியே. இத்தகைய கல்வியின் சீரிய பணியில் தமிழகம் கடந்து வந்த பாதையை இவ்வுரை நடைப்பகுதி விளக்குகிறது.
* தமிழ் இலக்கியங்களில் கல்வி, சமண, பௌத்தப் பள்ளிகள், மரபுவழிக்கல்வி முறைகள், ஐரோப்பியரின் கல்விப்பணி ஆகியவைப் பற்றி இங்குக் காண்போம்.

## புத்தக வினாக்கள்

**பலவுள் தெரிக** கேள்வி எண்: 1,2 புத்தக பக்கம் எண்:111

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ................ என்பதாகும். அ.மா.வி 2018, மார்ச் 2020

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

விடை: **அ) நூல் ஆ) ஓலை**

2. சரியான விடையைத் தேர்க.

அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியம் சிறப்புப்பாயிர உரைப்பாடல்
ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்
இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3) ஆத்திசூடி
ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்
5) நாலடியார்

i) அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1 ii) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2
iii) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1 iv) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 5

விடை: **iii) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1**

**குறுவினா** கேள்வி எண்: 1,2 புத்தக பக்கம் எண்:111

1. **சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது ?**

(i) "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது.
(ii) தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்பது மா. இராசமாணிக்கனாரின் கூற்றாகும்.

2. **உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.**

(i) உ.வே.சா. அவர்கள் தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்வி முறையில் கல்வி கற்றார்.
(ii) திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரிடம் உ.வே. சாமிநாதர் இம்முறையில்தான் பாடம் பயின்றார்.

**சிறுவினா** கேள்வி எண்: 1,2 புத்தக பக்கம் எண்:111

1. **தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.** மார்ச், கா.தே.2019

| | இலக்கியங்கள் | செய்திகள் |
|---|---|---|
| (i) | புறநானூறு | 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' |
| (ii) | நான்மணிக்கடிகை | இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் |
| (iii) | ஆத்தி சூடி | இளமையில் கல் |



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **தங்கை – தம் கை** அ.மா.வி 2018, மே 2022
   (i) அக்காளும் **தங்கை**யும் எப்போதும் ஒற்றுமையாக இருப்பர்.
   (ii) **தம் கை**யால் பிறருக்கு உதவி மட்டுமே செய்ய வேண்டும் என்று எண்ணுபவர் என் அப்பா.
5. **வைகை – வை கை** மார்ச் 2020
   (i) **வைகை**யாற்றில் வெள்ளம் பெருகிற்று.
   (ii) மண்ணில் **கை வை**க்காதே என்று குழந்தையை எச்சரித்தாள் அம்மா.
6. **நஞ்சிருக்கும் – நஞ்சு இருக்கும்**
   (i) துணி நீண்ட நாட்கள் பயன்படுத்தியதால் அது **நஞ்சிருக்கும்.**
   (ii) பாம்பின் பல்லில் **நஞ்சு இருக்கும்.**

## செய்து கற்போம்

**அருகில் உள்ள மாற்றுத் திறனாளர் பள்ளிக்குக் களப் பயணம் சென்று, அம்மாணவர்கள் கற்கும் முறைகள் குறித்து எழுதுக.**

**கல்விக் கற்கும் முறைகள் :**
(i) பார்வையற்றோர் – ஃபிராய்லி முறை
(ii) காது கேளாதோர் – தாக்டில் எழுத்துக்கள் மற்றும் சைகை மொழி
(iii) வாய் பேச முடியாதோர் – சைகை மொழி
(iv) உடல் ஊனமுற்றோர் – அனைத்து மொழியும்.

## நிற்க அதற்குத் தக

**கல்வி. நம்மைப் பண்படுத்த வேண்டும். நாம் பண்பட்டிருக்கிறோமா?**

| கல்வியின் விளைவு | என்ன செய்தீர்கள்/செய்வீர்கள்? |
|---|---|
| பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் | என் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் என அனைவருக்கும் மரியாதை செய்தேன். |
| பகுத்தறிவு சிந்தனையை வளர்த்தல். | பகுத்தறிவு சிந்தனை நூல்களைக் கற்று, அதன்படி நடப்பேன். |
| பொறுமையைக் கடைபிடித்தல் | நான் யாரோடும் சண்டையிட மாட்டேன். பிறர் என்னை இழிவாகப் பேசும்போது பொறுமையாகக் கடந்து செல்வேன். |
| தன்னை அறிதல், தன்னம்பிக்கை வளர்த்தல் | எனக்கான கடமை என்ன? என் பொறுப்பு என்ன? நான் எப்படி இருக்கிறேன்? எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் அறிந்து கொண்டு அதன்படி நடப்பேன். தோல்வியிலும் துவண்டுவிடாமல் தன்னம்பிக்கையுடன் இருக்க முயற்சிப்பேன். |
| சமத்துவம் பேணுதல். | என்னுடன் பழகும் அனைவரையும் சமமாக நடத்துவேன். |
| உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல். | யார்? எது என்று பாகுபாடு பார்க்காமல் அனைத்து உயிர்களிடமும் அன்பாக இருப்பேன். |

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. கல்விக்குழு – Education Committee | 4. மூதாதையர் – Ancestor |
| 2. உள்கட்டமைப்பு – Infrastructure | 5. மதிப்புக்கல்வி – Value Education மார்ச் 2020 |
| 3. செம்மொழி – Classical Language | 6. மன ஆற்றல் – Mental Abilities |

☆☆☆

## கணப்பொழுதில் ஒரு விரைவுப் பார்வை: 1 மதிப்பெண் வினா-விடைகள்

1. தமிழகத்தின் புகழ்பெற்ற சமணக் குன்று எது? **கழுகுமலை**
2. சமயநூலும் தத்துவநூலும் கற்பிப்போரை எவ்வாறு அழைப்பர்? **குரவர்**
3. எழுத்தும் இலக்கியமும், உரிச்சொல்லும் கணக்கும், கற்பிப்போரை எவ்வாறு அழைப்பர்? **கணக்காயர்**
4. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை 'பள்ளி' என்று கூறும் நூல் எது? **பெரிய திருமொழி**
5. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை 'ஓதும் பள்ளி' என்று கூறும் நூல் **திவாகர நிகண்டு**
6. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைக் 'கல்லூரி' என்று குறிக்கும் நூல் **சீவக சிந்தாமணி**





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



11. **பொருத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| i. | சிலம்பு | - | 1. | கொலுசு |
| ii. | பாடகம் | - | 2. | விரல்மோதிரம் |
| iii. | கெச்சம் | - | 3. | காலணி |
| iv. | பீலி | - | 4. | சதங்கை |

அ) 3, 1, 2, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 1, 2, 3, 4

12. **கண்ணிகள் என்பது ........**
அ) இரண்டடி கொண்டது ஆ) நாலடி கொண்டது
இ) மூன்றடி கொண்டது ஈ) ஐந்தடி கொண்டது

13. **காலுக்கு மேலே பெரிய விரியன் கடித்துக் கிடப்பானேன் சிங்கி ? - இதில் விரியன் போன்றது எது?**
அ) பாடகம் ஆ) தண்டை இ) கெச்சம் ஈ) சிலம்பு

14. **தண்டையை வரிசையாகப் பெற்ற நாடு ........**
அ) சேலத்து நாடு ஆ) குற்றாலம் இ) பாண்டிய நாடு ஈ) கோலத்து நடு

15. **நீண்டு குறுகியும் நாங்கூழ்ப் போல் இருக்கும் அணிகலன் ........**
அ) கெச்சம் ஆ) சிலம்பு இ) பாடகம் ஈ) தண்டை

16. **சிங்கி, காலாழி பீலியை பரிசாகப் பெற்றது ........**
அ) பாண்டிய நாட்டில் ஆ) கண்டியில் இ) கோலத்து நாட்டில் ஈ) குற்றாலத்தில்

17. **குறவஞ்சி ................. வகைகளில் ஒன்று.**
அ) பள்ளு ஆ) நாட்டுப்புறப்பாடல் இ) சிற்றிலக்கிய ஈ) குறத்திப்பாட்டு

18. **சிங்கிக்கு, சிலம்பு பரிசாகக் கிடைத்த நாடு .................**
அ) கலிங்க நாடு ஆ) சேலத்து நாடு இ) பாண்டிய நாடு ஈ) கண்டிய நாடு

19. **குற்றாலக் குறவஞ்சி............ விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது.**
அ) முத்து விசயரங்க சொக்கலிங்கனார் ஆ) மாணிக்கவாசகர்
இ) குற்றால நாதர் ஈ) வரத நஞ்சையப்ப பிள்ளை

20. **பயமில்லை ...... புணர்ச்சி விதி தருக.**
அ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
ஆ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
இ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் ஈ) ஈறு போதல்

---

விடைகள் :
1. ஆ) குற்றாலக்குறவஞ்சி
2. இ) திருநெல்வேலி
3. ஈ) குற்றால நாதர்
4. ஆ) திரிகூடராசப்பக் கவிராயர்
5. ஈ) பெயரெச்சம்
6. அ) கொலுசு
7. ஈ) நாடக
8. இ) குறவஞ்சி
9. அ) தூது
10. ஈ) 2 1 4 3
11. ஆ) 3 1 4 2
12. அ) இரண்டடி கொண்டது
13. ஈ) சிலம்பு
14. இ) பாண்டிய நாடு
15. இ) பாடகம்
16. ஆ) கண்டியில்
17. இ) சிற்றிலக்கிய
18. ஆ) சேலத்து நாடு
19. அ) முத்து விசயரங்க சொக்கலிங்கனார்
20. ஆ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

---

## குறுவினா

1. **திரிகூடராசப்பக் கவிராயர் - பற்றி எழுதுக.**

திருநெல்வேலியில் விசயநாராயணம் என்னும் ஊரில் தோன்றியவர். குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார். குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத் தமிழ், யமக அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். திருக்குற்றாலநாதர் கோவில் வித்வான் என்று சிறப்புப் பட்டப் பெயர் பெற்றவர்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. குறவஞ்சி – நூலின் அமைப்பை எழுதுக.**

குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக இலக்கிய வடிவமைப்பைக் கொண்டது. சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

**3. குறவஞ்சி – பெயர்க்காரணம் கூறுக.**

பாட்டுடைத் தலைவன் உலாவரக் கண்ட தலைவி, அத்தலைவன் மீது காதல் கொள்ள, குறவர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்குக் குறிகூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகிறது.

**4. குற்றாலக் குறவஞ்சி – நூற்குறிப்பு எழுதுக.** செப். 2021

தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள குற்றால நாதரைப் போற்றிப் பாடப்பெற்றது. குற்றாலக் குறவஞ்சி நாடகச் சுவை நிரம்பிய ஓசை நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்ற நூல். இந்நூல் விசயரங்க சொக்கநாத நாயக்கர் விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது. திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது.

## சிறுவினா

**1. சிங்கன் – சிங்கி உரையாடலை விவரி.**

தன் காதல் மனைவி சிங்கியை சில நாள்களாகக் காணாமல் தேடியலைந்த சிங்கன், அவளைச் சந்தித்தவுடன் முதலில் மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடுகிறான். உடனே அதிர்கிறான், பயப்படுகிறான். அவன் அதிர்விற்கும் பயத்திற்கும் காரணம் அவள் உடலில் புதிது புதிதாய் என்னென்னவோ கிடக்கிறது. அவன் தன் மனைவி சிங்கியைப் பார்த்து கேட்கிறான். 'என்னிடம் சொல்லாமல் நீ எங்கே சென்றாய்?' எனக் கேட்டான்.

சிங்கி மாலை சூடிய கூந்தலையுடைய 'தலைவிக்குக் குறி சொல்லப் போனேன்' என்றாள். அதற்கு சிங்கன் உன்னைப் பார்க்க அதிர்ச்சியாகவும், பயமாகவும் உள்ளதாகக் கூறக் காரணம் கேட்கிறாள் சிங்கி. அதற்கு சிங்கன் 'உன் காலில் பெரிய விரியன் பாம்பு கடித்துக் கொண்டிருக்கிறதே அது உனக்குத் தெரியவில்லையா?' எனக் கேட்கிறான்.

சிங்கி : அது சேலத்து நாட்டில் குறிசொல்லிப் பெற்ற சிலம்பு என்றாள்.
சிங்கன் : சிலம்புக்கு மேலே திருகுமுருகு போன்று உள்ளதே அது என்ன?
சிங்கி : கலிங்க நாட்டார் என் குறிக்குப் பரிசாகக் கொடுத்த தண்டை அது.
சிங்கன் : மண்புழு போல ஏதோ இருக்கே! அது என்னடி சிங்கி? எனக் கேட்க.
சிங்கி : பாண்டிய மன்னர் மகள் அவள் 'நினைத்ததை நான் குறியாகச் சொல்ல அதைக் கேட்டு மகிழ்ந்து கொடுத்த பாடகம் அது' என்று சொன்னாள்.
சிங்கன் : செத்த தவளை உன் காலில் கட்டியுள்ளாயே அது எதற்கு? என்று கேட்டான்.
சிங்கி : இது குற்றாலர் கோவில் பெண்களுக்குக் கூறிய குறிக்குப் பரிசாகக் கிடைத்த 'கெச்சம்' என்றாள். உடனே சிங்கன் உன் கால் சுண்டு விரலில் குண்டலப் பூச்சி சுருண்டு கிடப்பது போல் உள்ளது என்ன? அதுவா காலாழியும், பீலியும் என்று பதில் கூறினாள்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. குற்றாலத்தின் மீது தலபுராணம் பாடியவர் :** ஜூன் 2019

அ) திரிகூட ராசப்பக் கவிராயர் ஆ) மாணிக்கவாசகர்
இ) உமறுப்புலவர் ஈ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

**விடை: அ) திரிகூட ராசப்பக் கவிராயர்**

**2. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர்......** ஆகஸ்டு 2022

அ) சுந்தரர் ஆ) தொல்காப்பியர்
இ) திரிகூடராசப்பக் கவிராயர் ஈ) சுந்தரம் பிள்ளை

**விடை: இ) திரிகூட ராசப்பக் கவிராயர்**

☆☆☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 6

பல்கலை நிறுவு - கலை, அழகியல், புதுமைகள்

# திருச்சாழல்

- மாணிக்கவாசகர்

கவிதைப்பேழை

## கரு

✳ மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமைகளைப் பேசும் செய்யுள் வகை திருச்சாழல் ஆகும்.

✳ ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும் இன்னொருவள் இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படுவது திருச்சாழல்.

✳ இவ்வகையில் இறைவனின் பெருமைகளை இருபது பாடல்களில் மாணிக்கவாசகர் பாடியுள்ளார். அதில் மூன்று பாடல்கள் நமக்குப் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சிவபெருமான் மீது பாடப்பட்டவை இவை.

## ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : மாணிக்கவாசகர்
இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.

(சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர்)

பிறந்த ஊர் : திருவாதவூர்

காலம் : ஒன்பதாம் நூற்றாண்டு

இயற்றிய நூல்கள் : திருவாசகம், திருக்கோவையார்

**கூடுதல் செய்திகள்**

சிறப்புப் பெயர்கள் : தென்னவன் பிரமராயன், நாயன்மார், மூவர்

இயற் பெயர் : திருவாதவூரடிகள்

மாணிக்கவாசகர் பற்றி

ஜி.யு.போப் : திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரான ஜி.யு.போப், இவரைப்பற்றி. உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனதைக் கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை" – என்று குறிப்பிடுகின்றார்.

## பாடல்

**கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ**
**தாயுமிலி தந்தையிலி தான்தானியன் ஆயிடினுங்**
**காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.** 1

**கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த**
**ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ**
**ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட**
**மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.** 2

**தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை**
**ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ**
**ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்**
**வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.** 3

– மாணிக்கவாசகர்

## சொல்லும் பொருளும் - பாடல் 1

கேள்வி கோயில் சுடுகாடு : சுடுகாட்டைக் கோவிலாகவும்

கொல் புலித்தோல் நல்லாடை : கொல்லும் தன்மையுடைய புலியின் தோலை ஆடையாகவும் (கொண்ட)

தாயுமிலி தந்தையிலி : (சிவனுக்கு) தாய் தந்தை யாருமில்லை.

தான்தனியன் காணேடீ : இத்தன்மையனோ உங்கள் கடவுள் ? (என்று பெண்வினாவு)

www.Padasalai.Net www.surabooks.com



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**பதில்**

| | |
|---|---|
| தாயுமிலி தந்தையிலி | நம் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிட்டாலும் |
| தான் தனியன் ஆயிடினுங் | யாருமில்லாத தனியாய் இருப்பினும் |
| காயில் | அவன் சினந்தால் |
| உலகனைத்துங் கற்பொடிகாண் (சாழலோ) | இவ்வுலகம் அனைத்தும் கற்பொடியாகி விடும். |

### சொல்லும் பொருளும் - பாடல் 2

**கேள்வி**

| | |
|---|---|
| கோலால மாகிக் குரைகடல் வாய் அன்றெழுந்த | அக்காலத்தில் ஆரவாரத்துடன் ஒலிக்கின்ற கடலில் தோன்றிய |
| ஆலாலம் உண்டான் | ஆலகாலம் என்னும் விடத்தை உண்டான் |
| அவன் சதுர்தான் என்னேடீ | இதனால் அவன் பெருமைதான் என்னடி ? |

**பதில்**

| | |
|---|---|
| ஆலாலம் உண்டிலனேல் | ஆலகால விடத்தை அவன் உண்ணாவிடில் |
| அன்றயன் மால் உள்ளிட்ட | பிரமதேவன், திருமால் முதலிய உள்ளிட்ட |
| மேலாய தேவரெல்லாம் | மேன்மையுடைய தேவர்கள் அனைவரும் |
| வீடுவர் காண் (சாழலோ) | அன்றே அழிந்திருப்பார்கள். |

### சொல்லும் பொருளும் - பாடல் 3

**கேள்வி**

| | |
|---|---|
| | தோழியே ! |
| தானந்தம் இல்லான் | முதலும் முடிவும் இல்லாத பெரியோன் அவன் |
| தனையடைந்த நாயேனை | தன்னை விரும்பி அடைந்த நாய் போன்ற தன்மையுடைய என்னை |
| ஆனந்த வெள்ளத் | இன்பக் கடலில் |
| அழுத்துவித்தான் காணேடீ | திளைக்கச் செய்தானோ ? |

**பதில்**

| | |
|---|---|
| ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள் | ஆனந்த கடலில் திளைக்கச் செய்த திருவடிகள் |
| வானுந்து தேவர்கட்கோர் | விண்ணுலகத்தில் வாழுகின்ற தேவர்களுக்குக் கிடைப்பதற்கரிய |
| வான் பொருள்காண் சாழலோ | ஒப்பற்ற பெரும் பொருளாகும். இதனை அறிந்து கொள். |

### பொருளுரை

**பெண் 1** : சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்?

**பெண் 2** : எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

**பெண் 1** : அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை, சிவன் உண்டான். அதற்குக் காரணம் யாதோ?

**பெண் 2** : அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.

**பெண் 1** : தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே, இது என்ன புதுமை?

**பெண் 2** : உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.

### அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| 1. காயில் - வெகுண்டால் | 5. ஆலாலம் - நஞ்சு, விஷம் | 8. சதுர் - பெருமை |
| 2. அயன் - பிரமன் | 6. அந்தம் - முடிவு | 9. வீடுவர் - அழிவர் |
| 3. மால் - விஷ்ணு | 7. கோலாலம் - ஆரவாரம் | 10. காயில் - சினம் |
| 4. கொல்புலி - கொலைத்தொழிலையுடைய புலி | | 11. நல்லாடை - நல்ல ஆடை |

பத்தி இலக்கியம்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 7

வையத் தலைமை கொள் - நாடு, சமூகம், அரசு, நிருவாகம்

# புரட்சிக் கவி

- பாரதிதாசன் கவிதைப்பேழை

## கரு

* வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் 'காவியத்தைத் தழுவி', தமிழில் பாரதிதாசனால் 1937ல் எழுதப்பட்டதே புரட்சிக்கவி, மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்று ஆழமான கருத்துகளை இதில் புகுத்தியுள்ளார்.
* வடமொழியில் கதை நாயகனான கவிஞன் அஞ்சும் தன்மையுடையவனாக இருக்கிறான். இறுதியில் இறந்து விடுகிறார். ஆனால் தமிழில் அவன் நெஞ்சுரமிக்க இளைஞன், தன் காதலியின் உதவியாலும், தன் நிகரற்ற பேச்சாற்றலாலும் மக்களைக் கவர்ந்து, மன்னனை எதிர்த்துப் புரட்சிக்கு வித்திட்டுத் தானும் காதலில் வென்று, தன் மக்களுக்கும் குடியாட்சி பெற்றுத் தருகிறான் என்பது இந்நூலின் தனிச்சிறப்பு.

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : பாரதிதாசன்

**காலம்** : 29.04.1891 - 21.04.1964

**பெற்றோர்** : கனகசபை, இலக்குமிஅம்மாள்

**பற்று** : பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக கனகசுப்புரத்தினம் என்னும் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.

**சிறப்பு** : மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்றும், பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார்.

பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் நலச் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர்.

**காப்பியம்** : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேரதாண்டவம் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர்.

**விருது** : 'பிசிராந்தையார்' நாடகத்துக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது.

## நூற்குறிப்பு

வடமொழியில் எழுதப்பட்ட 'பில்கணீயம்' என்னும் காவியத்தைத் தழுவி, தமிழில் பாரதிதாசனால் 1937இல் எழுதப்பட்டதே புரட்சிக்கவி.

**கதாபாத்திரங்கள் :**

**அமுதவல்லி :** அழகிலும், பண்பிலும், அறிவிலும் சிறந்து விளங்கும் அரச குமாரி. தேவைப்பட்டால் நாட்டின் மன்னனையே எதிர்க்கும் அளவிற்குத் திண்மை கொண்டவள்.

**உதாரன் :** அமுதவல்லிக்கு யாப்பும், பாடல் புனையும் திறனும் கற்பிக்க வரும் ஒரு சாதாரண கவிஞன், நாட்டில் குடியாட்சி பிறக்க வித்திடுகிறான்.

**அரசன் :** அமுதவல்லியின் தந்தை.

**அமைச்சர் :** கவிஞனுக்கும் இளவரசிக்கும் இடையே காதல் மலராதவாறு பயிற்சி அளிக்க இயலும் என்று அறிவுறுத்துபவர்.

**முன்கதைச் சுருக்கம் :**

அரசன் ஒருவன் தன் மகள் அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையினைப் பயிற்றுவிக்க விரும்புகிறான். அதற்காக அமைச்சரிடம் கருத்துரை கேட்கிறான். அமைச்சர் உதாரன் பெயரை முன் மொழிந்து 'அவன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' என்று கூறுகிறார். தன் மகள் எளிய கவிஞரோடு காதல் வயப்படுவாளோ என எண்ணி அரசன் தயங்குகிறான். அதற்கு அமைச்சர் ஓர் உத்தியைக் கூறுகிறார். அதன்படி உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடம் கூறுகின்றனர். இது போல உதாரனிடம் அமுதவல்லி தொழுநோயாளி என்று தெரிவிக்கின்றனர். இருவருக்கும் இடையில் திரையிடப்படுகிறது. உதாரன், அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தருகிறான்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

ஓடியது. பிறகு மெல்ல மெல்லத் தொலைக்காட்சி கவர்ச்சியிலிருந்து விடுபட்டோம். இப்போதெல்லாம் நாங்கள் படிப்பின் காரணமாகத் தொலைக்காட்சியை எப்போதோ ஒரு முறை தான் பார்க்கிறோம். வண்ணத் தொலைக்காட்சியில் கதியாய் இருந்த நாங்கள், இன்று அந்தப் பக்கமே செல்வதில்லை.

**நீதி:**

எந்தவொரு செய்தியையும் தொடர்ந்து கேட்டாலும் பார்த்தாலும் கசந்து போய்விடும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.

**19. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

**பழமொழி விளக்கம் :**

உலகில் செல்வம் படைத்தவராக இருந்தாலும் நோய் இருப்பின் அவர்கள் வறியவர்களே. ஏழ்மையானவர் ஒருவர் நோயற்ற வாழ்வு பெற்றிருந்தால் அவரே உலகில் செல்வந்தர் ஆவார்.

**வாழ்க்கை நிகழ்வு :**

என் பாசத்துக்குரிய நண்பர் சிறப்பாகக் கல்வி கற்று ஒரு பட்டதாரியானார். பின் பணத்தின் தேவையை உணர்ந்து பல மாணவர்களுக்குக் கணிதம் சொல்லிக் கொடுத்து, பல மாணவர்களைத் திறமையான மாணவர்களாக உருவாக்கினார். அவருடைய எளிமையான முறை மாணவர்களைக் கவர்ந்தது. பல பள்ளிகளிலிருந்து வந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரிடம் கல்வி பயின்றனர். கடின உழைப்பால் சில மணிநேரம் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதுண்டு அதைச் சரியாகக் கவனிக்காமல் மாத்திரைகளை மட்டும் வாங்கி உண்ணுவார். அதனால் அவருக்கு உடல் நிலை கடுமையாகப் பாதித்து மருத்துவரிடம் சென்றபோது, அளவுக்கு அதிகமாக மாத்திரைகளை உண்டதால் அவரது சிறுநீரகம் பாதித்தது என்று டாக்டர் கூறினார். பிறகு அவர் சம்பாதித்த பணம் எல்லாம் தன் நோய்க்குச் செலவு செய்ததனால் ஏழ்மைக்குத் தள்ளப்பட்டார்.

**நீதி:**

நாம் பணத்தைச் சம்பாதித்துவிடலாம். ஆனால் நம் உடல்நிலை பாதிக்கப்பட்டால் மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டுவர இயலாது. இதுவே இப்பழமொழியின் கருத்தாகும்.'

**20. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.**

**பழமொழி விளக்கம் :**

விளக்குதானே எரிந்து கொண்டே இருக்கும் என்று இருந்து விடக்கூடாது. திரி எரிய எரிய ஒளி மங்கும். அப்போது திரியைத் தூண்டிவிட்டால் தான் ஒளி பிரகாசிக்கும். இது திறமைமிக்கவர்க்கும் வழிகாட்டுதல் நல்ல பயன்தரும் என்பதை விளக்க இப்பழமொழி பயன்படுகிறது.

**வாழ்க்கை நிகழ்வு :**

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு ஆவார். அவருடைய தந்தையார் புகழ்பெற்ற வழக்கறிஞரும் தேசபக்தருமான மோதிலால் நேரு அவர்கள் தன் ஒரே மைந்தன் ஜவகரைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார். இயற்கையாகவே நுண்ணறிவு படைத்தவர் ஜவகர். பிள்ளைகளோடு பந்து விளையாடிக் கொண்டிருக்கையில் அது ஒரு சிறு குழிக்குள் விழுந்துவிட்டது. கையை விட்டு எடுக்க முடியவில்லை. பிள்ளைகள் திகைக்க ஜவகர் ஒரு வாளி தண்ணீரைக்குழியில் ஊற்றினார். பந்து மேலே வந்தது. இத்தகையை நுண்ணறிவை ஜவகர் பெற்றிருந்தார்.

**நீதி :**

அதேபோல் மாணவர்கள் எவ்வளவு நுண்ணறிவு பெற்றிருந்தாலும் அவன் வளர்ச்சிக்கு உதவி செய்ய ஆசிரியர் தேவை என்பது சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும் என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

**21. "தன் கையே தனக்கு உதவி"**

**பழமொழி விளக்கம் :**

பிறர் உதவியை எதிர்பார்க்காமல் நம் பணியை நாம் செய்து கொள்வது இப்பழமொழியின் கருத்து.

**வாழ்க்கை நிகழ்வு :**

மாடசாமி தன்னுடைய பிள்ளைகள் இருவரையும் எப்படியாவது மேல் படிப்பைப் படிக்க வைத்து பெரிய மனிதர்களாக்கிட வேண்டும் என விரும்பினார். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர், குழந்தைகள் அவருக்கு சற்று காலம் கடந்தே பிறந்தனர். அதனால் ஓய்வு பெறும் வயதுக்குள் அவர்களை உயர் படிப்பிலோ உயர் பதவியிலோ அமர்த்திப் பார்க்க, கொடுத்து வைக்கவில்லை. தான் அதிகமாகச் செலவு செய்து தன் தங்கைகளைப் பெரிய இடத்தில் திருமணம் செய்து கொடுத்து இருந்தாலும், அவர்கள்கூட அவர் நிலையை உணர்ந்த பாடில்லை. இருவரையும் பொறியியல் கல்லூரியில் சேர்த்துவிட்டார். மதிப்பெண்கள் நன்கு எடுத்திருந்ததால் இடம் கிடைத்துவிட்டது. யானைக்குத் தீனி போட வேண்டும். அதுபோல் அந்தப் படிப்புக்குப் பணம் கட்ட வசதியில்லை. அவரது ஓய்வு ஊதியம் உண்பதற்கே சரியாக இருந்தது. நிலம் கொஞ்சம் ஊரில் இருந்தாலும் சரியான விலைக்குப் போகும் நிலை இல்லை. முடிவில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். கடன் வாங்குவதைவிட நல்ல வழியாக எங்காவது ஒரு பள்ளியில் சிறு பள்ளியாக இருந்தாலும்கூட, வேலைக்குச் சேர்ந்து ஒரு நாலாயிரம் அல்லது ஐந்தாயிரம் சம்பாதிக்கலாம் என்பது தான் அது.

**நீதி :** பிறரை எதிர்பார்க்காமல் தாமே உழைத்து வாழ்க்கையை நடத்துவது என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores





## பழமொழி – மொழிபெயர்ப்பு

1. A guilty conscience needs to accuser.
குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.
2. Be just before you are generous.
ஆற்றில் போட்டாலும் அளந்து போடு
3. Bend the twig, Bent the tree.
ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
4. Constant dripping wears away the stone.
எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
5. Child is the father of the man.
விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
6. Ever ass loves his bray
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
7. Early saw , Early now
பருவத்தே பயிர் செய்
8. Hard work is the mother of good luck.
உழைப்பே உயர்வு தரும்
9. Like priest, Like People
தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை
10. No rain, no grains
மாரியில்லாத காரியமில்லை
11. Haste makes waste.
பதறாத காரியம் சிதறாது.
12. Charity begins at home.
தனக்கு மிஞ்சிதான் தானமும் தருமமும்.
13. Covet all lose all.
பேராசை பெருநட்டம்.
14. Diamonds cut diamonds.
முள்ளை முள்ளால் எடு.
15. East or west, Home is the best.
எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது.
16. Empty vessels make the greatest sound.
குறைகுடம் கூத்தாடும்.
17. Money makes many things.
பணம் பத்தும் செய்யும்.
18. Eagles don't catch flies.
புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
19. Prevention is better than cure.
வருமுன் காப்பதே சிறந்தது.
20. Work is worship.
செய்யும் தொழிலே தெய்வம்.
21. Time is gold.
காலம் பொன் போன்றது.
22. Birds of the same feather flock together.
இனம் இனத்தோடு சேரும்.
23. Every cock will crow upon his own dunghill.
வீட்டில் எலி வெளியில் புலி.
24. Art is long and life is short.
கல்வி கரையில, கற்பவர் நாள் சில.
25. Look before you leap.
ஆழம் அறியாமல் காலை விடாதே.
26. Strike the rod while it is hot.
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
27. The mills of God grind slow but sure.
அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்.
28. The face is the index of the mind.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
29. All that glitter is not gold.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
30. Hearty laugh dispels disease.
வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்.

## மொழியாக்கம்

1. Trespassers will be prosecuted.
அத்துமீறி நுழைபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.
2. The thief tried to get at.
திருடன் என்னைத் தாக்க முயன்றான்.
3. Air is a mixture of several gases.
பல வாயுக்களின் கலவையே காற்று
4. This journey is going to be pleasant me.
இந்தப் பயணம் மிகவும் இனிதாக அமையப் போகிறது.
5. Good Book must be read.
நல்ல புத்தகங்களைப் கட்டாயம் படிக்க வேண்டும்.
6. Villages are the back bone of India.
இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்களேயாகும்.
7. Congratulation on the distinction conferred on you.
நீ பெற்ற வெற்றிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.
8. The people in Japan are quiet, industrious and intelligent.
ஜப்பானிய மக்கள் அமைதி, சுறுசுறுப்பு மற்றும் அறிவு மிக்கவர்கள்.
9. The caption in the newspaper was misleading.
செய்தித்தாளின் தலைப்பு, தவறான வழியில் இட்டுச் சென்றது.
10. The new Headmaster took over last week.
புதிய தலைமையாசிரியர் கடந்தவாரம் பொறுப்பேற்றார்.
11. I backed up my friends case.
என் நண்பனின் வழக்குக்கு நான் ஆதரவு தந்தேன்.
12. The Government announced some schemes.
அரசு சில திட்டங்களை அறிவித்துள்ளது.
13. Students want to join computer courses.
மாணவர்கள் கணிப்பொறி வகுப்பில் சேர விரும்புகிறார்கள்.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

11ஆம் வகுப்பு

# உடனடித்தேர்வு ஆகஸ்டு - 2022

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

[14 × 1 = 14]

1. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ..................... .
   அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
   இ) தொகை விளக்கம்
   ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
2. இறகுகளின் தொகுதி ..................... எனப்படும்.
   அ) பறவை ஆ) தோகை
   இ) சிறகு ஈ) நிலம்
3. “குயில்” என்னும் இலக்கிய இதழை நடத்தியவர் .....................
   அ) சுரதா ஆ) வாணிதாசன்
   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
4. “என் வாழ்வு என் கைகளில்” என்று நம்பியவர் .....................
   அ) காந்தியடிகள் ஆ) ஜீவானந்தம்
   இ) பிரபஞ்சன் ஈ) அண்ணாமலையார்
5. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ..................... நினை.
   அ) முகக்குறிப்பை அறிந்தவரை
   ஆ) எண்ணியதை எண்ணியவரை
   இ) மறதியால் கெட்டவர்களை
   ஈ) சொல்லேர் உழவரை
6. ஆசியாவிலேயே முதன்முதலில் ‘சிம்பொனி’ என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் .....................
   அ) எம்.எஸ். விஸ்வநாதன்
   ஆ) சங்கர் கணேஷ்
   இ) ஏ.ஆர். இரகுமான் ஈ) இளையராஜா
7. Prefix என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை எழுதுக.
   அ) இனக்குழு ஆ) பின்னொட்டு
   இ) முன்னொட்டு ஈ) புவிச்சூழல்
8. வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்?
   அ) உளவாளி ஆ) பட்டதாரி
   இ) வருமானம் ஈ) கொடையாள்
9. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் :
   அ) வால்ட் விட்மன் ஆ) ஆற்றூர் ரவிவர்மா
   இ) ஸ்டெ.ஃபான் மல்லார்மே
   ஈ) பாப்லோ நெரூடா
10. ‘பெருங்கொடை’ என்ற சொல்லின் புணர்ச்சி விதி :
    அ) ஆதிநீடல் ஆ) ஈறுபோதல், இனமிகல்
    இ) அடி அகரம் ஐ ஆதல்
    ஈ) முன் நின்ற மெய் திரிதல்
11. பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக அமைந்த நூல்
    அ) திருவாசகம் ஆ) தேவாரம்
    இ) திருவிசைப்பா ஈ) திருவருட்பா
12. குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலின் ஆசிரியர் :
    அ) சுந்தரர் ஆ) தொல்காப்பியர்
    இ) திரிகூடராசப்பக் கவிராயர்
    ஈ) சுந்தரம் பிள்ளை
13. உலகச் சிட்டுக் குருவிகள் நாள் :
    அ) மார்ச் 8 ஆ) ஜுன் 6
    இ) ஏப்ரல் 5 ஈ) மார்ச் 20
14. 2011 ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை :
    அ) ஜோயிதா மோண்டல் மாகி
    ஆ) செவ்வி நர்த்தகி நடராஜ்
    இ) தாரிகா பானு ஈ) பிரித்திகா யாஷினி

### பகுதி - II - பிரிவு - 1

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. [3 × 2 = 6]

15. கண்காணி - குறிப்பு வரைக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. மதீனா நகரம் செம்மை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. திருச்சாழல் - குறிப்பு தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [2 × 2 = 4]

19. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. மலை, குன்று இவற்றின் பொருள் வேறுபாடு யாது?
21. “நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்” என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**ஏன் :** தூக்கணாங்குருவிகள் புற்களைக் கொண்டு தனக்காகக் கூடு கட்டிக் கொள்ளும். அக்கூடுகள் காற்றடிக்கும்போது அசைந்தாடும் அழகைள 'காற்றில் ஆடும் புல்வீடுகள்' எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

33. **(i) மருந்து :** முன் உண்ட உணவு நன்றாகச் செரித்ததை அறிந்து பின், ஏற்ற உணவை அளவோடு உண்டால் உடலுக்கு மருந்தே தேவையில்லை.

**(ii) மருத்துவர் :** நோயின் தன்மை, நோய் வருவதற்கு உரிய காரணம் அந்நோயைப் போக்குவதற்கு உள்ள வழிமுறைகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**(iii) மருத்துவர் :** மருத்துவன், நோயாளியின் வயதின் அளவு, மருந்தை ஏற்றுக்கொள்ளும் உடல் தன்மை, பீடிக்கப்பட்ட நோயின் அளவு, நோயுற்றிருக்கும் காலநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவம் செய்ய வேண்டும்.

**(iv) மருத்துவம் :** நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

34. (i) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் குளம், குட்டை, ஏரிகள் உருவாயின. தரிசு நிலங்கள் பயிர் செழிக்கும் விளைநிலங்களாக மாறி பயிர் விளைந்தது.

(ii) உழவர்கள் வாழ, சிற்றூர்கள் உண்டாயின. கல்லையும் மலையையும் பிளந்து உலோகங்களைக் கண்டு கருவிகள் செய்யப்பட்டன. தங்கம் கண்டெடுக்கப்பட்டது. கடலுக்குள் மூழ்கி மூச்சடக்கி முத்து எடுக்கப்பட்டது.

**பிரிவு - 2**

35. **வரை** என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.

(i) நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ii) திராவிட நிலப்பகுதிகளின் மலை தொடர்பான சொற்கள், சிந்துவெளிப் பண்பாட்டு நிலப்பகுதிகளில் காரணம் கருதியே வழங்கப்பட்டன.

(iii) இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச்சொற்களின் நேரடித் தொடர்பு இன்றுவரை நீடிக்கிறது.

36. (i) ஜீவா பெற்ற வரம் பேச்சுக்கலை.

(ii) அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.

(iii) பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்களை காலடியில் போட்டு மிதித்தவர். அவருடைய பாணி இரவல் பாணி அல்ல, கற்று அறிந்ததும் அல்ல.

(iv) நாட்டுமக்களின் தரம், அனுபவம், பழக்கம், நம்பிக்கை போன்றவற்றை நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதர் ஜீவா. செய்தியைக் கலை நோக்கோடு அணுகிக் கற்பனை கலந்து பேசும் பேச்சுப்பாணி.

37. (i) கவிஞர் 'மல்லார்மே' போன்றவர்கள் இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. எதிரில் ஒருவரை வைத்துக் கொண்டு பேசுவதைப்போல் இல்லாமல் தனிமையில் தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்வதைப் போல் இருக்கும்.

(ii) தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்வதாகும். இவர்களின் கவிதைகளைக் குறியீட்டுக் கவிதைகள் என்று கூறலாம்.

38. (i) ஒரு முறை திருவாங்கூரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கப் பள்ளி மாணவர்களும் குழுக்கள் அமைத்துச் செயல்பட்டனர்.

(ii) ஒரு குழுவினர் நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள தோவாளை என்னும் இடத்திற்குச் சென்று பணியை மேற்கொண்டனர்.

(iii) அங்கிருந்த கிராம மக்களிடம் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துப் பேசி நிதி திரட்டினர். அக்குழுவிற்குத் தலைவராக இருந்தவர் ஜீவா.

**பிரிவு - 3**

39. **பொருண்மொழிக் காஞ்சித்துறை**

**துறை விளக்கம் :** மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆகும்.

**சான்று :**

புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

**சான்று விளக்கம் :** தமக்காக உழைக்காமல் பிறருக்காக உழைப்பவர்கள் அமிழ்தம் கிடைத்தாலும் தனித்து உண்ண மாட்டார்கள். யாரையும் வெறுக்காமல் சோம்பல் இன்றி செயல்படுவார்கள். பிறர் அஞ்சுவதற்கு தாமும் அஞ்சி புகழ் வருமெனில் தம் உயிரையும் கொடுப்பார்கள். உலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் பழி வரும் செயல்களைச் செய்யாமல் தவிர்ப்பர். எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.

**துறைப் பொருத்தம் :** மக்களுக்குத் தேவையான வாழ்வியல் நெறிகளைக் கூறியுள்ளதால் இது பொருண்மொழிக் காஞ்சித் துறைக்குப் பொருந்தியுள்ளது.

40. **அணி இலக்கணம் :** செய்யுளில் முன்னர் வந்த ஒரு சொல் அதே பொருளில் பின்னரும் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

**சான்று :** "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

**சான்று விளக்கம் :** நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் நோய் என்னும் சொல் 'பிணி' என்னும் பொருளிலும் 'நாடி' என்னும் சொல் ஆராய்ந்து என்னும் பொருளிலும், மீண்டும் மீண்டும் வந்துள்ளதால், இது சொற்பொருள் பின்வருநிலையணியாகும்.

**(அல்லது)**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**அணி விளக்கம் :** புலவர் தாம் கூறக் கருதிய பொருளை நேரே கூறாமல் அதனோடு ஒப்புமை உடைய பிறிதொரு பொருளைக் கூறி, தாம் சொல்லக் கருதியதைக் குறிப்பாகப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

**அணி அமைந்த பாடல் :**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

**அணி விளக்கம் :** மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் வலிமையான வண்டியின் அச்சும் முறிந்துவிடும். இந்த உவமையிலிருந்து வலியவரை எளியவர் பலர் கூடி வென்றுவிடுவர் என்னும் உவமேயம் பெறப்படுகிறது. அதனால், இது பிறிது மொழிதல் அணியாகும்.

41. **அனுப்புநர்**

சு.கபிலன்
எண்.30, 18, ஏ.எல். முதலி 2ஆவது தெரு,
நேருநகர், வேளச்சேரி, சென்னை - 42.

**பெறுநர்**

உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
தினத்தந்தி நாளிதழ், சென்னை

**பொருள்:** மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், நான் கடந்த கல்வியாண்டில் நடந்த பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 99% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியில் மாநில அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் முதுநிலையில் (Senior Grade) தட்டச்சர் தேர்வில் முதல் நிலையிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளேன். குடும்பச் சூழலின் காரணமாய்ப் பணிக்கு வரும் நிலையில் உள்ளேன். இப்பணி எனக்கு வழங்கும் பட்சத்தில் நான் அதை சிறப்பாக செய்து முடிப்பேன். எனவே இப்பணியை எனக்கு வழங்குமாறு தாழ்மையுடன் தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இங்ஙனம்
உண்மையுள்ள
சு. கபிலன்

**<u>தன்விவரப்பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சு.கபிலன் |
| தந்தை பெயர் | : | ச. சுரேஷ் பாபு |
| பிறந்த தேதி, வயது | : | 15-03-2002, 19 வயது |
| பாலினம் | : | ஆண் |
| கல்வித் தகுதி | : | பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி |
| எடை | : | 48 கிலோ |
| உயரம் | : | 160 செ.மீ |
| குருதி வகை | : | 'O' Positive |
| தொழிற் தகுதிகள் | : | தட்டச்சு - தமிழ், ஆங்கிலம் முதுநிலை முதல் நிலையில் தேர்ச்சி, சுருக்கெழுத்து முதல் நிலை (முதுநிலையில்) தேர்ச்சி |
| கணினி | : | அடிப்படைக் கணினி அறிவியல் தேர்ச்சி. |
| பட்டறிவு | : | ஓர் ஆண்டு கலைமகள் தட்டச்சு பயிற்சி (பயிற்றுநர் பணி) |
| முகவரி | : | எண்.30, 18, ஏ.எல். முதலி 2ஆவது தெரு, நேருநகர், வேளச்சேரி, சென்னை - 42. |
| அலைபேசி எண்கள் | : | 9841xxxx74, 9003xxxx83, |
| மின்னஞ்சல் முகவரி | : | kabilan@gmail.com |
| அறிந்த மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம், இந்தி |

உறுதி மொழி

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் என் சுய உணர்வுடன் கூறிய உண்மைத் தகவல்களே ஆகும். உண்மைக்கு மாறான தகவல்கள் ஏதும் இடம் பெறவில்லையென உறுதியளிக்கிறேன்.

கையொப்பம்
சு.கபிலன்

42. அ) காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) காலத்திற்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

இ) தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.

ஈ) முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

43. 1) என் அனுமதியில்லாமல் என்னை யாரும் புண்படுத்த முடியாது.

2) கண்ணுக்குக் கண் என செயல்பட்டால் அது இந்த உலகம் முழுவதையும் குருடாக்கிவிடும்.

3) இந்த உலகத்தில் மாற்றத்தைக் காண விரும்பினால் நீ கண்டிப்பாக மாற வேண்டும்.

4) கோழைகளால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. மன்னித்தல் என்பது வலிமைமிக்கவர்களின் பண்பாகும்.

## பகுதி - IV

44. அ) **முன்னுரை: வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு :**

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள், மனிதனின் மேம்பட்ட வாழ்வுக்குத் தேவையான கருத்துகளைத் தன்னிடம் கொண்டுள்ளது. இந்தக் கருத்துகள் மக்களால் பின்பற்றப்படுமானால் இந்த மனித சமூகம் உயர்வான நிலையை அடையும் என்பது உண்மை. இங்கு வாழ்வின் உயர்வுக்கு வள்ளுவர் கூறும் சில குறட்பாக்களைக் காண்போம்.

**வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறளே:**

**இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

**கடமை மறவாதிருத்தல்**

மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது, அவ்வாறு மகிழ்ச்சி ஏற்பட்டபோது கடமையை மறந்து கெட்டழிந்தவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே கடமையை மறத்தல் கூடாது. அதுவே வாழ்வை உயர்த்தும் என்கிறார்.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்**

நாம் செய்து முடிக்க வேண்டிய செயலை மனதில் மறவாமல் நினைத்துக் கொண்டிருந்தால் அதை அடைவது எளிது. ஆகவே குறிக்கோளை மனதில் நிறுத்த வேண்டும் என்கிறார்.

**குறிப்பறிதல் : குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்**

முகக்குறிப்பை வைத்துக் கொண்டு மனதில் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் திறன் படைத்தவரை எதைக் கொடுத்தாவது நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**பாதுகாப்பு : மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் எனநான்கே ஏமம் படைக்கு**

வீரம், தன்மானம், முன்னோர் வழி, நம்பிக்கைக்கு உரியவர் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் படைக்கு மட்டுமல்ல வாழ்க்கைக்கும் பாதுகாப்பாகும். மேலும் பகை என்னும் பண்பில்லாத ஒன்றை, ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது.

**மருந்து : மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்**

வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக விளங்குவது உடல்நலம். இக்குறள்படி உடலுக்கு மருந்து எப்போதும் தேவையில்லை. ஒருவர் முன்பு உண்ட உணவு செரித்துவிட்டதா என அறிந்து கொண்டு உணவு உண்டால் மருந்து தேவையில்லை. ஆகவே வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக விளங்குவது உடல்நலமேயாகும்.

**முடிவுரை:**

வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறளே! என்பதை சில குறட்பாக்கள் வழி அறிந்துணர்ந்தோம். இவற்றை அறிந்து கொண்டதோடு மட்டும் நின்றுவிடாமல் வாழ்வில் பின்பற்றி மகிழ்ச்சியாகவும், குற்றம் நீங்கியும் உயர்வான நிலையை அடைந்தும் வாழவேண்டும் என்பதே இக்குறட்பாக்களின் நோக்கமாகும்.

**(அல்லது)**

**ஆ) முன்னுரை :**

அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கியங்கள் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். 'புரட்சிக்கவி' என்ற இந்தக் காவியத்தின் மூலமாக பாரதிதாசன் மக்களாட்சி சிந்தனைகளை முன் வைக்கிறார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளாகும். பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் கதைப் பாத்திரம் வாயிலாகக் காண்போம்.

**நிறை உழைப்பு :**

(i) தண்டனை நிறைவேற்றும் முன் அமைச்சர் உதாரன், அமுதவல்லி இருவருக்கும் கடைசியாகப் பேச வாய்ப்பளிக்கிறார். உதாரன் மக்களை நோக்கி ஆவேசமாக உரை நிகழ்த்துகிறான்.

(ii) 'ஓடி வருகின்ற ஆற்றுநீரைத் தடுத்து குளம், குட்டை, ஏரிகளை அமைத்தவர் நீங்கள். அவற்றிலிருந்து நீர் கொண்டு செல்ல வாய்க்கால் வெட்டியவர் நீங்கள். தரிசு நிலத்தை வரப்பெடுத்து உழுது பயிர்களை விளைவித்தவர் நீங்கள். உழவுத் தொழில் செய்யும் மக்கள் கூடி வாழும் சிற்றூர்களை உருவாக்கினீர்கள்.

(iii) கல்லையும் மலையையும் பிளந்து உலோகத்தால் கருவிகளை உருவாக்கியவர் நீங்கள். தங்கத்தை வெட்டியெடுத்தது உங்களின் கைகள் கடலுக்குள் மூழ்கி மூச்சையடக்கி முத்தெடுத்தவர் நீங்கள். இவையெல்லாம் உங்கள் தோளின் உழைப்பால் வந்ததே அல்லாமல் அரசனின் செயலால் அல்ல.

**குடியரசு :**

அரசனுக்கும் எனக்கும் வழக்கு உண்டாகி உள்ளது. இதற்கு தீர்வு காண வேண்டியவர் அரசனாக எப்படி இருக்க முடியும்? தீர்ப்புக் கூற வேண்டிய இடத்தில் மக்களை வைப்பதுதானே சரியாக இருக்கும். அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால், அந்நாடு அழிவதே நல்லது என்பேன். இன்று எனக்கு ஏற்பட்ட நிலை நாளை உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படுமல்லவா? எண்ணிப்பாருங்கள்.

**எனக்கு உயிர் தமிழ் :**

அரசன் என்னை அழைத்துத் தன் மகளுக்குக் கவிபாடக் கற்றுக்கொடுக்கப் பணித்ததற்கும் அவள் என்மேல் காதல் கொண்டதற்கும் தமிழ்தானே காரணம்? அத்தமிழ்மொழிக்கு இழுக்கு உண்டாவதை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கலாமா? தமிழை உயிரெனப் பாதுகாக்க வேண்டாமா?

**புரட்சிக்கவி :**

அரசனுக்குப் பின் நாட்டை ஆளும் தகுதி படைத்த அமுதவல்லி மக்களுக்கு ஆளும் உரிமையைக் கொடுக்க நினைத்தாள். அவளுக்கும் தண்டனை வழங்கிச் சட்டத்தை அவமதித்தான் அரசன், சிந்திப்பீர் மக்களே! விடைபெறுகிறேன் நான் இன்று' என்று தாய்நாட்டையும் மக்களையும் வணங்கினான் உதாரன். அன்புக்கு அழிவில்லை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றி உதாரன் வாயிலாக உரக்க சொன்னதால் பாரதிதாசன் 'புரட்சிக்கவி' என்பதை மெய்ப்பித்திருக்கிறார்.

**முடிவுரை :**

இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறு சிறு பாடல்களை, அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்களுக்குப் பாடிக் காட்டுவார். கல்வி, பொதுவுடைமை, பெண்ணியம் எனப் பலத்தளங்களில் புரட்சி மிக்க கவிதை வரிகளை எழுதியதால் அறிஞர் அண்ணாவால், புரட்சிக்கவி என்று பாராட்டப்பட்டு பரிசளிக்கப் பெற்றார்.

45. **அ) முன்னுரை :**

பொதுவுடைமை இயக்கத் தலைவர், காந்தியவாதியாக, சுயமரியாதை இயக்க வீரராக, தமிழ்ப்பற்றாளராக, உயர்ந்து விளங்கியவர் ப. ஜீவானந்தம். இவரின் பேச்சு நடைப் பற்றி விவரிக்கிறது இப்பகுதி.

**மேடையில் வாழ்ந்த மனிதர் :**

மேடையில் வாழ்ந்த மனிதன் மேடையில்தானே மறைந்திருக்கவும் கூடும். ஜீவா என்ற தொண்டன் தனது இறுதி மூச்சுவரை கர்ஜித்துக் கொண்டுதான் இருந்திருப்பான் என்பதில் இவர்களுக்கு எத்தனை நம்பிக்கை - எனவே தான் 'மூச்சு நின்றுவிட்டது' என்று நான் சொன்னபோது பேச்சு நின்றதோ? எனக் கேட்கின்றனர்.

**நெஞ்சோடு வளர்ந்த கனவு :**

ஜீவா தனக்கென ஒரு தத்துவத்தைப் படைக்காமல் ஏட்டில் இருந்த தத்துவக் கருத்துகளைத் தனது அரிய திறமையால் கலை நோக்கால், கற்பனையால் உயிர்பெறச் செய்து, மனிதன் முன் படைத்தவர்.

**பேச்சு நடை :**

பேச்சுக் கலை அவர் பெற்ற வரம். அவர் பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமான நளினமாக இருக்கும். பேச்சுக்கலையை விளக்கும் புத்தகங்கள் கூறும் விதிகளைத் தம் காலடியில் போட்டு மிதித்தவர். அவருடைய பேச்சு நடை தனித்துவம் வாய்ந்தது.

**இரண்டு கைப்பிடி விஷயம் :**

செய்தியை அளவுக்கு அதிகமாகக் கூறாமல் ஒரு சில கருத்துகளைக் கூறி விளங்க வைத்துவிட்டால் போதும் என்பது அவருடைய எண்ணம். வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்து போல் இரண்டு கைப்பிடி விஷயம் தான் எடுத்துக் கொள்வார். மேடை மீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்.

**பசுமையான எண்ணங்கள் :**

நான் ஒரு பள்ளி மாணவர், படித்துக் கொண்டிருக்கிறேன். படித்துக் கொண்டே இருப்பேன்' என்ற எண்ணம் எப்போதும்

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com